Registered as a Newspaper in Ceylon ★ விலே சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு |  |
| --- | --- |
| சந்தா விபரம் |  |
| வாரப்பதிப்பு உட்பட |  |
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெ. இ. எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது வைகாசி 9 ஆம் நாள் துல்ஹஜ் 28 23 5 63 வியாழக்கிழமை இதழ் 102

# ஆசிரியர் இடமாற்றம் ஒத்திவைப்பு?

## ஆசிரிய சங்கங்களின் மத்தியில் புள்ளிவிபர கருத்து வேறுபாடு

யாழ்ப்பாணம், வியாழன்

**உத்தேசிக்கப்பட்ட ஆசிரியர் இடைக்கால இடமாற்றம் ஒத்திவைக்கப்படலாமெனத் தெரிகிறது. இந்த இடமாற்றம் ஜூலை முதல் திகதியில் நடைபெறவிருந்தது.**

**இந்த இடமாற்ற விஷயத்தில் ஆசிரிய சங்கங்கள் பல ஆட்சேபம் தெரிவித்திருந்தன. இவ்வித இடைக்கால இடமாற்றத்தால் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரிதும் பாதிக்கப்படுவார்களெனச் சுட்டிக்காட்டப்பட்டது.**

சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் போதிக்கும் ஆசிரியர்களிடையே இந்த இடமாற்ற விஷயத்தில் கருத்துவேறுபாடுகள் நிலவுவதாகவும் சிலசாராரிடையே அதிருப்தி தோன்றியுள்ளதாவும் தெரிகிறது.

அரசாங்க பாடசாலைகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட காலவரை ஓரிடத்தில் பயிற்றுவித்தால் அந்தக் கால எல்லை முடிந்ததும் மாற்றம் செய்யப்படுவது விதியாக இருக்கும்போது சுவீகரிக்கப்பட்டபாடசாலைஆசிரியர்கள்சிலர் தயாரித்துள்ள புள்ளி விபர விதிப்படி அதிக காலம் ஒரு இடத்தில் சேவை செய்தவர் அதே இடத்தில் தொடர்ந்து பயிற்றுவிக்கவகை செய்கிறது என சில பகுதியினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

## இந்தியாவுக்கு ரூ. 15 கோடிகடன்

புதுடில்லி, மே. 21

இந்தியாவில் மின்சார, நிலக்கரித்திட்டத்துக்கு உதவிபுரியும் வகையில், அமெரிக்கா 14 கோடி ரூபாய் கடன் அளித்திருக்கிறது. வட்டியில்லாத இக்கடன் 40 ஆண்டுகளில், அவசிமானல் 50 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கப்படும்.

## 1000 நீக்ரோக்கள் கைதாகினர்

வாஷிங்டன், மே 21

வட கரோலினவிலுள்ள கிரீன்ஸ பரோர்வில்ப் இன ஒதுக்கலை எதிர்த்து ஆர்பாட்டம் நடத்தியதற்காக 1000 க்கதிகமான நீக்ரோக்கள் கைது செய்யப்பட்டனர்.

## வழக்கறிஞர் வராததால் வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

இரணைதீவு கொலைவழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நேற்று நீதிபதி அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆஜராகாததால் வழக்கு ஒத்திப்போடப்பட்டது.

அரசாங்க உதவி ரசாயன பரிசோதகர் திரு. சபாநடேசன் இன்று இவ்வழக்கு சம்பந்தமாக கோர்ட்டிற்கு வந்திருந்தபோதும், இவ்வழக்கு பிரதானமானதாக இருப்பதால் அடுத்த தவணைக்கு அரசாங்க இரசாயன பரிசோதகர் திரு. ஜி. ஏ. சி. ஸ்ரீமானேயையும் ஆஜராகும்படி அறிவிக்கப்பட்டது.

இன்றைய விசாரணையில் எதிரிகளின் சார்பில் திரு. டீ கணேசலிங்கம், திரு. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். இம்மாதம் 27-ந் திகதி இவ்வழக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது.

## வர்த்தக மந்திரி இன்று வருகிறர்

கொழும்பு, வியாழன்

ஜெனிவாவில் நடைபெற்ற வர்த்தகமந்திரிசன் மகாநாட்டில் கலந்துகொள்வதற்குச் சென்ற வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின இன்று கொழும்பு வந்து சேருவார் என் எதிர்பார்க்கப்படுகிறது. மகாநாடு நேற்று முடிவடைந்தது. வர்த்தகக் கட்டனங்கள் குறைப்பது பற்றி ஆலோசிப்பதற்காக இந்த மகாநாடு மூன்றுநாட்கள் நடைபெற்றது.

## வவனியா முக்கொலை; இருவர் கைது

வவனியா, புதன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல், பெரியகட்டு என்ற இடத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவம் காரணமாக, பெரியகட்டைச் சேர்ந்த எஸ். ஆறுமுகம், என். ஞானப்பிரகாசம், என். முருகையா ஆகிய மூவரும் மரணமானர்கள். இம் மூவரும் ஸ்தலத்திலேயே மாண்டனர் என்றும், ஒருவர் வீதியிலும், மற்றவர் வயலிலும் மற்றுமொருவர் காவல் கொட்டிலிலும் இறந்து கிடந்தனர் என்றும் கூறப்படுகிறது.

இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்றும் மாமன், மருமகன், மைத்துனன் ஆகிய மூவருமே கொலையுண்டவர்களென்று கூறப்படுகிறது. கொல்லப்பட்டவர்களில் ஒருவர் எட்டுக் குழந்தைகளுக்குத் தந்தையெனச் சொல்லபபடுகிறது.

இக் கொலை சம்பந்தமாக சிற்றம்பலம் என்பவரும் செல்வராஜா என்பவரும் கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இன்று டாக்டர் பாலசிங்கம் பிரேத பரிசோதனை நடத்தினர். ஸ்தலத்தில் அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. மதியாபரணம் விசாரணை நடத்தினர். வவனியா பொலிஸ நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் கணபதிப்பிள்ளையும் பொலிஸ கோஷ்டியினரும் இது சம்பந்தமான விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

## ரூ. 4250 கள்ள நோட்டுக்கள் கைப்பற்றப் பட்டன

### கள்ள நோட்டு வழக்கில் சாட்சியம்

மாவிட்டபுரம், புதன்

நெல்லியடியைச் சேர்ந்த வைத்திலிங்கம் தில்லையம்பலம், புலோலிதெற்கைச் சேர்ந்த மயில்வாகனம் வைத்திலிங்கம், பருத்தித்துறையைச் சேர்ந்த பொன்னையா கதிரேசு, வேலணையைச் சேர்ந்த பேரம்பலம் சண்முகரத்தினம், நெல்லிபழை பன்னலையைச் சேர்ந்த திருநாவுக்கரசு இராசதுரை ஆகிய ஐவரும் சட்ட விரோதமாக 50 ரூபாய் கள்ள நோட்டுக்களை வைத்திருந்ததாகவும் அவற்றை விற்பனை செய்யமுயன்றதாகவும் பருத்தித்துறை பொலிசாரால் குற்றம்சாட்டி பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம்முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வல்வெட்டித்துறை பட்டினசபை ஓவர்சியர் திரு. கந்தவனம் மார்க்கண்டு சாட்சியமளித்தார். அவர் சாட்சியமளிக்க ஆரம்பித்ததும் எதிரிதரப்பில் ஆஜரான வழக்கறிஞர்களில் ஒருவரான திரு. எஸ். சி. கதிரவேலு இவ்வழக்கில் முக்கிய சாட்சியான குச்சுவெளி பொலிஸ்நிலையபொறுப்பதிகாரி சப்இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் கோர்ட்டில் பிரசன்னமாகி இருந்ததை ஆட்சேபித்தார். நீதிபதி ஆட்சேபனையைஏற்று சபஇன்ஸ்பெக்டரை கோட்டிலிருந்து வெளியே செலுமாறு உத்தரவிட்டார். மார்க்கண்டு சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

“சப் இன்ஸபெக்டர் பாஸ்கரனை எனக்குத் தெரியும் கடந்த வருடம் அக்டோபர் மாதம் 30-ம் திகதி இரவு 11-30 மணியளவில் பாஸ்கரன் நித்திரையாக இருந்த என்னை எழுப்பி தன்னுடைய வீட்டுக்குக் கூட்டிச் சென்ருர். அப்போது தனக்கு உதவியாக என்னைக்கூட்டிச் செல்வதாகக் கூறினர். அவருடைய வீட்டுககு சோமு என்பவரும் அழைக்கப்பட்டார். சோமு வந்ததும் பாஸ்கரன் துன்னலையில் டைத்திலிங்கம் என்பவர் மூலமாக கள்ளநோட்டு எடுக்கலாம என்றும் அதற்கு நாங்கள் இருவரும் உதவி செய்ய வேண்டுமென்றும் என்னை மாங்குள மில்முதலாளியாக நடிக்கும்படியும் சோமுவை என்னுடைய வேலையாளாக நடிக்கும்படியும் தான் கார்ச்சாரதியாக நடிப்பதாகவும் கூறினர். நாங்கள் அதற்கு ஒப்புக்கொண்டோம் அதன்படி இரவு 12-10க்கு வைத்திலிங்கம் வீட்டிற்கு காரில் சென்ரேம். அங்கு வைத்திலிங்கத்தைக் கூப்பிட்டதும் அவர் வந்தார். சோமு இறங்கிச் சென்று வைத்திலிங்கத்திடம் ஏதோ இரகசியம் பேசினர். சிறிது நேரத்தில் இருவரும் வந்து கார் பின் ஆசனததில் ஏற்றினர்கள். அங்கு வைத்திலிங்கத்தை மில் முதலாளியாக நடித்த எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். நான எனக்கு கள்ளநோட்டுத் தேவையென்று வைத்திலிங்கத்திடம் கூறினேன். அதற்கு வைத்திலிங்கம் இப்போது கைவசம் நோட்டுக்கள் இல்லையென்றும் கதிரேசு என்பவர் எங்கோ வெளியில்சென்றுள்ளதாகவும் அதிகாலை 5 மணிக்கு வந்தால் கதிரேசுவுடன் வேலணைக்குச் சென்று நோட்டுக்கள் எடுத்துத்தரலாம் என்று சொன்னர். நாங்கள் பின்னர் வருவதாகச் சொல்லிவிட்டு பருத்தித்துறைப் பொலிஸ நிலையம் சென்று புகார்செய்து வீட்டுக்குச் சென்ரேம். பின் 4-30 மணியளவில் பாஸகரனுடன் பொலிஸ நிலையம் வந்து சார்ஜண்ட் மெண்டிசையும் கூட்டிக்கொண்டு வைத்திலிங்கம் வீட்டுக்குச் சென்ரேம். மெண்டிஸ எனது வேலையாளாக நடித்தார். பாஸகரன் என்னிடம் கள்ளநோட்டுற்கு என்ன கமிஷன் கேட்டாலும தருவதாகக் கூறச்சொன்னர். வைத்திலிங்கம் வீட்டுக்கு சென்ரேம். வைத்திலிங்கமும்கதிரேசுவும் வந்தகார் பின்சீட்டில் ஏறினர்கள். நான் அவர்களிடம் என்னவீதம் கமிஷன் தேவையென்று கேட்டேன். கதிரேசு 100க்கு 50வீதம் உண்மையான நோட்டு வேண்டும் என்ருர். வைத்திலிங்கம் தனக்கு 100க்கு 5வீதம் வேண்டும என்ருர். நாம் ஒத்துக்கொண்டு வேலணைக்குச் சென்ரேம். அங்கு செல்லும் வழியில் இருந்து தபாலகந்தோரிலிருந்து 300 யார் தூரத்தில் கதிரேசன் காரை நிறுத்தச் சொன்னர். கதிரேசுவும் வைத்

(5-ம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றிய புத்தகம் திருப்பிக் கொடுக்கப்படும்?

யாழ்ப்பாணம், புதன்

நாரந்தனையைச் சேர்ந்த சவரிமுத்து அன்ரன் என்பவரிடமிருந்து பொலிஸார் கைப்பற்றிய ‘சட்டமறுப்பு’ என்னும் புத்தகத்தின் 23 பிரதிகளை திரும்பவும் அவரிடமே கொடுக்கும்படி பொலிஸ் தலைமைக் காரியாலயம் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

சில மாதங்களுக்கு முன்பு திரு. அன்ரன், யாழ்ப்பாணம் பஸ நிலையத்தில் ‘சட்ட மறுப்பு’ நூலின் பிரதிகளை விற்பனை செய்து கொண்டிருந்தபோது பொலிஸாரினல் கைது செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## வரி விளம்பரம்

### தொய்வு: நீரிழிவு

துணைப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

### விற்பனைக்கு

C. E. 4865 இலக்கமுடைய டொச் லொறி விற்பனைக்கு இருக்கிறது. தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்தில் பார்வையிடலாம். 657 கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். 11'1

### காணி விற்பனைக்கு

சங்கரத்தையைச் சேர்ந்த ஓடக்கரையில் வீடுகட்டுவதற்கு வசதியான கிணற்றுடன் சேர்ந்த 4 பரப்பு நிலம் விற்பனைக்கு தயாராக இருக்கிறது. விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்தில் சந்திக்கவும். முருகேசு திருநாமம், சங்கரத்தை, வட்டுக்கோட்டை. 1112

### நிர்வாகி தேவை

யாழ்ப்பாணம், சின்னக்கடை ஐக்கியபண்டகசாலைக்கு ஒரு நிர்வாகி (மனேஜர்) தேவை. தகுதியுள்ளவர் கீழ்க்காணும் விலாசத்துக்கு 29-5-63 முன் விண்ணப்பிக்கவும். மாத வேதனம் ரூபா 100/- பிணைப்பணம் ரூபா 500/- செலுத்த வேண்டும். எல்.எஸ். இராசநாயகம் (தலைவர்), சென்.பிலோமினு அச்சகம். 102, பெரியதெரு, யாழ்ப்பாணம். 1113

### மரண அறிவித்தல்

யாழ். வைத்தியசாலையில் கடமைபுரியும் அ. நாகரத்தினத்தின் தந்தை 'கதிர்காமர்-சின்னத்தம்பி' சென்ற 21-5-63-ல் காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் 22-5-63 புதன்கிழமை பி. ப. 4 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்தில் தகனம்செய்யப்பட்டது,

காசியதரிசி, ம.ச.கொ. 1115

### விற்பனைக்கு

கந்தரோடை, கலட்டியில் கயற்கண்ணி என்ற காணியில் 15 பரப்பு விற்பனைக்கு உண்டு. தேவையானோர் விலை விபரங்களுடன் திரு. தி. சிவகுருநாதன், கந்தரோடை, சுன்னுகம் என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். 1114

### கேள்விப் பத்திர விளம்பரம்

"மிருசுவில் கிராமசபையால் பின்வரும் வேலைக்குக்கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன. "மிருசுவில் கிராம சபை புதுக்கட்டிடம்" மேற்படி வேலைக்கு (8-6-63) சனிக்கிழமை காலை 9-00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரம் (5-6-63) புதன்கிழமை காலை 9-00 மணியில் இருந்து பகல் 12-00 மணிவரை கேள்விப்பத்திரப் பணம் ரூபா 50 -ம் (ஐம்பது) பத்திரக் கட்டுப்பணம் ரூபா 25 -ம் (இருபத்தைந்து) கட்டியதன் பெயரில் பெற்றுக்கொள்ளலாம்.

பதினையாயிரம் ரூபாவிற்கு குறையாத பதிவுபெற்ற தகுதியான ஒப்பந்தக்காரர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். ஏனைய விபரங்கள் வடபகுதி உள்ளூர் ஆட்சி அதிபர் காரியாலயத்திலும், மிருசுவில் கிராமசபைக் காரியாலயத்திலும் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம், A. D. பொனனுக்கோன், அக்கிராசனர், கிராமசபை, மிருசுவில். 1018

**ஆசிரியருக்குக் கடிதங்கள்**

# ஆனந்தன் முன் வருவாரா?

நீலக்கடலை நீந்திய நீச்சல் வீரன் திரு. நவரத்தினசாமியும் அலைகடல்வீரன் ஆனந்தனும் விடுத்த அறிக்கைகள் எல்லோர் கவனத்தையும் குறிப்பாகத் தமிழ்மக்களின் கவனத்தை ஈர்ந்தன. எரிச்சலையும் ஊட்டின.

இருவர் அறிக்கைகளையும் படிக்கும்போது உண்மையிலேயே வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை.

முன்னேடியான திரு. நவரத்தினசாமி தனதுமாமன்என்றும் நீச்சலில் தனது குருநாதர் என்றும் கூறிக் கொள்கிறூர் ஆனந்தன். ஆனுல், அடுத்தகணம் போட்டிக்கு அழைக்கின்றூர். சரியா? முறையா? திரு. நவரத்தினசாமி தவறு செய்துவிட்டார் என்றே வைத்துக் கொள்வோம். எந்தவொரு மாணவனும் செய்யக்கூடாத குரு-சிஷ்யப் பண்பாட்டுக்குப் பங்கம் விளைக்கும் வகையில் நடந்து கொண்டார் பின்னேடி.

இருவரில் யார் சொல்வது பிழை என்று சொல்வதற்கில்லை. ஆனுல், திரு. ஆனந்தன் உண்மையிலே நீந்தி முடித்திருக்க முடியாது என்பதைக்காட்ட ஈழநாட்டில்வந்த முன்னேடியின் கடைசி அறிக்கை பல தடயங்களை தருகின்றது, அதைவிட இதைப் போன்ற அறிக்கைகள் வெளிவருவதற்கு முன்னுல் ஆனந்தன் நீந்தி முடிக்கவில்லை என்ற கதைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில்-குறிப்பாக பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் பேசப்பட்டது.

நிலைமை இப்படி இருக்க சவால்விட்டு திரு. நவரத்தினசாமியைப் போட்டிக்கு அழைப்பதைவிட்டு ஐயத்தை நீக்க வேண்டும். சந்தேகமுள்ளவர்கள் பார்க்கும்படி வழி வகுத்து நீந்துகின்ற நாளைப் பிரகடனப்படுத்தி --குறிப்பிட்ட நாளில் கடலை நீந்திக் கடந்து-தனது புகழ்மாலையில் கிடக்கும் கறையை நீக்கிக் குறையைப் போக்கிக் கொள்ளுதல் மிகப் பொருத்தமாக இருக்கும்.

இப்படிச் செய்தலால் திரு. ஆனந்தனின் புகழ் வளரும்; கறை நீங்கும்.

மீசாலை. ஏ. பி. செல்லையா.

## முல்லைத்தீவை மாற்றவேண்டாம்

முல்லைத்தீவு பழமை பொருந்திய பெயர் அல்லாது சரித்திரப் பிரசித்தி பெற்ற பெயரும் கூட. இப்பெயரை மாற்றுவதால் ஏற்படும் இன்னல்கள் பல. மேலும் 1947-ம் ஆண்டு இலங்கைக்கு பாராளுமன்ற ஆட்சி ஒரு முன்னர் அரசாங்கசபை இருந்தபோது எமது தொகுதி மன்னுர், முல்லைத்தீவு, வவனியா என வழங்கப்பட்டது. ஆனபடியால் முல்லைத்தீவு எனக் குறிக்கப்படும்போது பட்டினசபை எல்லைக்குள் மாத்திரம் முல்லைத்தீவு என்னும் பெயர் அடங்கவில்லை.

நான் வசிக்கும் கிராமமாகிய சிலாவத்தை முள்ளியவளைக் கிராம சபையில் அங்கம் வகிக்கிறது. ஆனுல் கிராமசேவையாளர் பகுதி முல்லைத்தீவு.மேலும் கரைதுறைப்பற்று முல்லைத்தீவு என்பதே முல்லைத்தீவு பெரும்பாக இறைவரிஉத்தியோகஸ்தரின் பெரும்பாகப்பகுதி. அதாவது கொக்கிளாய் முதல் சுண்டிக்குளம் எல்லை வரை அடங்குகின்றது.

இப்பெயர்மாற்றத்தை விரும்பும் முல்லைத்தீவுப் பட்டினசபையார் அயல்கிராமசபைகள், கி. மு. சபைகள், பொதுமக்கள், வாக்காளர் சகலரையும் கொண்ட ஆலோசனைக் குழுவுடன் யோசனை செய்யாதிருக்கவேண்டும். எனவே, தயவு செய்து இப்பெயர்மாற்றத் தீர்மானத்தை வாபஸ் பெறுமாறு வேண்டுகிறேன்.

சூ. மனுவேற்பிள்ளை, கிராமசபை உறுப்பினர், சிலாவத்தை, முல்லைத்தீவு.

## பிள்ளைகளின் கல்விப்பிரச்னை

யாழ்ப்பாணம், புதன்

பிள்ளைகளுக்கு ஏற்படும் கஷ்டங்களைப் பற்றி நடவடிக்கை எடுக்க யாழ்ப்பாணம் பெற்றூர் ஆசிரியர் சங்கம் பெற்றூர்களிடமிருந்து விபரங்கள் கோரியுள்ளது. பெற்றூர்சங்கம் பெற்றோர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் குழந்தைகளின் கல்விப்பிரச்னை பற்றிய விபரங்களைத் தமக்கு அறிவிக்குமாறும் தாம் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

## தென்வியட்னும் அரசாங்கத்தை கண்டிக்கவும்

— எம். பி.

கொழும்பு, புதன்

தென்வியட்னும் அரசாங்கம், புத்த சமயத்தவர்களுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளை கண்டிக்கும்படி முள்கிரிகலை எம். பி. திரு. ஜோர்ஜ் ராஜபக்ஸ அரசாங்கத்தை கேட்டுள்ளார்.

## பஸ் சேவை

எமது கிராமமாகிய கரணவாய் தெற்கிலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்லவேண்டுமாயின் அது அரை நாள் பிரயாணமெனவே கூறலாம். காங்கேசன்றை, கீரிமலை என்பன வடமகாணத்திலுள்ள பிரசித்தி பெற்ற இடங்களாக விளங்குகின்றது. கீரிமலைக் கேணியையும், காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையையும் இம்மாகாணததிற்கு வருவோர் பார்க்கத் தவறுவதில்லை. அப்படிப்பட்ட பிரசித்தி பெற்ற இடங்களுக்குச் செல்ல இககாலத்தில் மிகக் கஷ்டப்படவேண்டியிருக்கின்றது. தென்னிலங்கையில் உள்ள ஒவ்வொரு முக்கிய இடத்திற்கும் பஸ் சேவை ஒழுங்காக நடந்துகொண்டிருக்கின்றது. அரசாங்கம் இவ் விஷயத்தில் தமிழ்மக்களுடன் பாரபட்சமான முறையில் நடந்துகொள்கிறதென எண்ணவேண்டியுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து நெல்லியடியினூடாக கீரிமலை, காங்கேசன்துறை ஆகிய இடங்களுக்கு பஸ் சேவையே இல்லை. இதனுல் இவ்விடங்களிலுள்ள பொதுமக்களும், உத்தியோகஸ்தர்களும் தனிப்பட்டவரின் வான் சேவையையே நம்பி இவ்விடங்களுக்கெல்லாம் செல்லவேண்டியிருக்கின்றது. இவர்களது வான் சேவையை அவர்கள் தடைபண்ணினுலோ அல்லது அரசாங்கம் நிறுத்தினுலோ எமது நிலை அதோகதி தான். எமது கிராமத்திலிருந்து காங்கேசன்துறை அல்லது கீரிமலைக்கு பஸ்ஸில் செல்லவேண்டுமானுல் அச்சுவேலி, வசாவிளான் என்பனவற்றை கடந்தே செல்லவேண்டும். இப்படிச் செல்வது ஓர் நீண்ட தேவையற்ற பிரயாணமாகும். அத்துடன் இதில் பல பஸ்கள் ஏறி இறங்கித்தான் செல்லவேண்டும். ஆகவே இனியாவது இவ்விஷயத்தைப் பற்றி பஸ் அதிகாரிகள் பரிசீலனை செய்து பருத்தித்துறையிலிருந்து நெல்லியடியினூடாக கீரிமலைக்கு ஒரு நேரடி பஸ் சேவையை ஏற்பாடு செய்வதன் மூலம் இக்குறையை நிவிர்த்தி செய்வார்களா?

ம. க. ஸ்ரீதரன் கரணவாய் தெற்கு, கரவெட்டி.

# உலக்கையால் தலையில் அடித்ததும் விழுந்தார்

## கோண்டாவில் கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

கோண்டாவில் கொலைவழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது காலஞ்சென்றவரின் மகன் மூத்தாம்பி என்னும் இராசு சாட்சியமளித்தார்.

21-4-63-ல் கோண்டாவிலைச் சேர்ந்த செல்லன் கந்தையா என்பவர், யாழ்ப்பாணம் நகரசபையில் தொழிலாளராகக் கடமையாற்றுபவரும், மாமனுமாகிய சுப்பன் வெள்ளையனை அடித்துக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் திரு.டி. கணேசலிங்கம் திரு. விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானுர். கோப்பாய் பொலிஸ இன்ஸ்பெக்டர் வழக்கை நடத்தினுர்.

மூத்தாம்பி என்னும் இராசன் சாட்சியமளித்தபோது கூறியதாவது:-

எனது தகப்பனுர் சம்பவம் நடந்தன்று காலைச் சாப்பட்டை முடித்துக்கொண்டுபோனுர். மாலை 5 மணிக்குக் குடி போதையில் வீடுவந்தார். அவர் எனது தாயாரையும், என்னையும், வீட்டிலுள்ள மற்றவர்களையும் ஏசினுர். பின்பு பவளத்தை துரத்திச்சென்று கன்னத்தில் அடித்தார். எனது தாயாரைப் பேசியபொழுது அவரை எனது கைகளால் அடித்தேன். பின்பு தகப்பனுர் முகத்தில் கலால் உதைந்தேன். அப்பொழுது எனது தாயார், பவளம் எல்லோரும் கூச்சலிட்டார்கள்.

எனது மைத்துனர் கந்தையா தனது வீட்டிலிருந்து வந்தார். கந்தையாவைக் கண்டதும், எனது தகப்பனுர் எங்கள் வீட்டிலிருந்தஅவரின்பெட்டியை தூக்கி எறியப்போனுர். 'எதற்காக பெட்டியை எறிகிருய்' என்று கந்தையா கேட்டார், 'கேள்வி கேட்க நீயார்' என்று தகப்பனுர் கூறி ஒழுங்கையை நோக்கிச் சென்றூர். கந்தையா சிறிய உலக்கையுடன் அவருக்குப் பின்னுல சென்றூர். தகப்பனுர் பெட்டியை எறிந்ததும், கந்தையா உலக்கையால் தலையில் அடித்தார். கந்தையா ஒருதரம் தான் அடித்தார். தலையிலிருந்து இரத்தம் வழிந்தோட தகப்பனுர் கீழே விழுந்தார். அவரின் மூக்கிதிலிருந்தும் இரத்தம் வந்தது. அதன்பின் வாந்தியெடுத்தார். கந்தையா முறிந்த உலக்கையை அங்கே விட்டுவிட்டு, தகப்பனுரை வளவுக்குள் இழுத்துவந்தார். நானும், தாயாரும், அயலவரும் அவருக்கு உதவிசெய்தோம். நான் முறிந்த உலக்கையைக் கொண்டுவந்து வீட்டடியில் போட்டேன். உலக்கையின் முறிந்த மற்றத்துண்டு பின்புகாணப்படவில்லையாரோ எடுத்திருக்கவேண்டும்.

எனது தாயாருக்கும், கந்தையாவுக்கும் முன்புகூடத் தொடர்பிருந்துவருவதாக எனது தகப்பனுர் சந்தேகப்பட்டார். இதனுல்தான் அடிக்கடி சண்டைகள் ஏற்பட்டு, தகப்பனுர் தாயாரை பேசுவார். கந்தையாவும், என் சகோதரியும் எங்களுடன் 6 மாதத்திற்குமுன் ஒரே வீட்டிலிருந்தார்கள். தகப்பனுர் அவர்களைப் போகச் சொல்லிவிட்டார். கந்தையா அதன் பின் பெட்டியை எடுத்துக் கொண்டு தனது வீட்டிற்குச் சென்றூர். சிறிது நேரத்தில் ஒரு கார் கொண்டுவந்து எனது தாயாரும், கந்தையாவும் தகப்பனுரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றூர்கள்.

தாயார் தகப்பனுரை அடிக்கவில்லையென்றும், கந்தையா தான் தகப்பனுரை அடித்தாரென்றும், நீதிபதி கேட்டபோது சாட்சி பதில்சொன்னுர்

கோண்டாவில் கிழக்கு, கணவதி மகள் பவ்ளம் சாட்சியமளித்தபோது கூறியதாவது:

காலஞ்சென்றவர் எனது மாமா. எனது தகப்பனுர் எனது தாயாரைபிரிந்தபின்பு, நாங்கள் மாமாவுடன் வசித்து வந்தோம். மாமாவுடன் அவரது மகன் மூத்தாம்பி இருந்தார். காலஞ்சென்றவரின் மகள் மகாதேவி,கந்தையாவை மணந்தபின் எங்கள் வீட்டிற்குக் கொஞ்சம் தள்ளி ஒரு வீட்டிலிருந்தார்கள். காலஞ்சென்ற மாமா யாழ்ப்பாணம் நகரசபையில் தொழிலாளியாக வேலைபார்த்தார்.

21-4-63 ஞாயிற்றுக்கிழமை

(5-ம் பக்கம் பார்க்க)

**எச். எஸ். ஸி.**

**பல்கலைக் கழக புகுமுக வகுப்பு**

இலங்கையில் சிறந்த, நவீன முறையில் சகல கலைப்பகுதி, விஞ்ஞானப் பகுதிப் பாடங்களும் ஆங்கிலத்திலும் தமிழிலும் கடிதம் மூலம் போதிக்கப்படும்.

விபரங்களுக்கு:

**யூனிட்டட் இன்ஸ்டிடியூட்ஸ்**

நெல்லியடி, கரவெட்டி.

**கலா ரசிகர்கட்கோர் முக்கிய அறிவித்தல்**

சென்ற இருபது வருடங்களாக இந்தியாவில் இருந்து சிறந்த கலைஞர்களை வரவழைத்து யாழ் மக்களின் மனதை மகிழ்வித்த கொக்குவில் T. K. சின்னத்துரை அவர்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் நிமித்தம் இம்முறை ஈழத்தின் சிறந்த கலைஞர்களை கொண்ட ஓர் கோஷ்டியை அமைத்திருக்கிறூர். இக் கோஷ்டியில் T. P. ராசலட்சுமி அவர்களின் இன்னிசைவிருந்தும் சூரியா, சந்திரா சகோதரிகளின் நடனவிருந்தும் திறமைவாய்ந்த கண்ணன் கோஷ்டியாரின் நவீன பின்னணி இசையுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. மங்கள வைபவங்களுக்கும் மற்றும் கோயில் உற்சவங்களுக்கும் தேவையானோர் கீழ்க்காணும் விலாசத்தில் விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

T. K. சின்னத்துரை
651, K. K. S. ரோட்,
யாழ்ப்பாணம்.

## திருமண அழைப்பு

| மணமகன் | மணமகள் |
|---|---|
| **அழகக்கோன் B. A.** | **கற்பகத்தரசி** |

பருத்தித்துறை, அல்வாய் தெற்கு ஆயுள்வேத டாக்டர் வி. எஸ். முருகேசம்பிள்ளை தம்பதிகளின் புதல்வன் அழக்க்கோன் B. A. க்கும் அல்வாய் வடக்கு (வியாபாரிமூலை) க. அ. கந்தநயினுர் (உரிமையாளர் கண்டி க. அ. க. சகோதரர் கம்பெனி) தம்பதிகளின் புதல்வி கற்பகத்தரசி (பத்மா) க்கும் நிகழும் சோபகிருது வருஷம் வைகாசி மாதம் 10-ம் திகதி (24-5-63) வெள்ளிக்கிழமை இரவு 11-53-க்கு மேல்வரும் சுப முகூர்த்தத்தில் மணமகள் இல்லத்தில் (வியாபாரிமூலை) திருமண வைபவம் நடைபெறும். உறவினர்களும், அன்பர்களும், நண்பர்களும் இந்த அழைப்பை ஏற்று சபையைச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

# ஆச்சார்யா கிருபளானி அமோக வெற்றி

## இடைத்தேர்தலில் இரு இடங்களையும் காங்கிரஸ் இழந்தது

புதுடில்லி, மே 22

அம்ரோகா தொகுதியில் நடைபெற்ற லோகசபைஸ்தானத்துக்கான உபதேர்தலில் ஆச்சார்யாகிருபளானி வெற்றி பெற்றுள்ளார். ஆச்சார்யா கிருபளானி அவருடன் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகரான ஹாமீஸ்முகம்மது இப்ராகிமை 50,000 வாக்குகளால் தோற்கடித்தார், கிருபளானியுடன் போட்டியிட்ட மற்றும் நான்கு சுயேச்சை அபேட்சகர்களும் கட்டுப்பணத்தை இழந்தனர்.

பாருக்காபாத் தொகுதி இடைத்தேர்தலில் டாக்டர் ராம் மனோகர் லோகியா 57000 வாக்குகளால் அவருடன் போட்டியிட்ட முன்னாள் இந்தியத் தகவல் மந்திரியும் காங்கிரஸ அபேட்சகருமான டாக்டர் பி. வி. கேஸ்கரைத் தோற்கடித்தார். இவருடன் போட்டியிட்ட பிரஜா சோஷலிஸ்ட் அபேட்சகரும் சுயேச்சை அபேட்சகரும் கட்டுப்பணமிழந்தனர்

சென்ற பொதுத் தேர்தலில் ஆச்சார்யா கிருபளானி வடபம்பாய்த் தொகுதியில் திரு. கிருஷ்ணமேனனுடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். டாக்டர் லோகியா அலகபாத்தில் பிரதமர் நேருவுடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். சென்ற 15 மாதங்களில் டாக்டர் கேஸ்கருக்கு ஏற்பட்ட இரண்டாவது தோல்வி இது.

ஜோன்பூர் தொகுதி இடைத்தேர்தலில் ஜனசங்கட்சி அபேட்சகர் ராஜ்தேவ்சிங் வெற்றி பெற்றுள்ளார்.

# 500 பிக்குகள் சைகோன் வீதிகளில் ஊர்வலம்

சைகோன், மே 22

இம்மாதம் 8-ம் திகதி சைகோனில் ஏற்பட்ட கலவரத்தில் கொலையுண்ட பௌத்தர்களுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக சுமார் 500 பௌத்த பிக்குகளும் பிக்குணிகளும் நேற்றுக் காலை சைகோன் நகரவீதிகளில் ஆர்ப்பட்ட ஊர்வலம் நடத்தினர்.

அசம்பாவித சம்பவம் எதுவுமில்லாமல் பலத்த பொலிஸ் கண்காணிப்புடன் ஊர்வலம் அமைதியாகச் சென்றது.

மதப்பாகுபாட்டை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று கோரி மேலும் ஊர்வலங்கள் நடத்தவிருப்பதாக பௌத்தர்கள் தெரிவித்தனர்.

மே 8-ம் திகதி நடைபெற்ற சம்பவத்தில் அரசாங்கத் துருப்புக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து சமயச்சடங்கு வைபவத்தில் கலந்துகொண்ட பல பௌத்தர்களைக் கொன்று குவித்ததாக பௌத்தர்கள் கூறுகின்றனர். அந்தச் சம்பவம் பயங்கரவாதிகளின் குண்டுவீச்சினுல் ஏற்பட்டதென்றும் கத்தோலிக்க அதிகாரிகளின் பாகுபாடான நடவடிக்கையல்லவென்றும் அரசாங்கம் தெரிவித்தது.

# ஸ்பாங்கூர் பகுதியில் சீனர் மீண்டும் வாலாட்டம்

## சீனவுக்கு இந்தியா ஆட்சேபக் குறிப்பு

புதுடில்லி, மே 22

லடாக்கில் ஸ்பாங்கூர் பகுதியில் இம்மாதம் 4, 5-ம் திகதிகளிலும் சென்ற மாதம் 27-ம் திகதியும் சீனத்துருப்புக்கள் ஆத்திரமூட்டத்தக்க முறையில் நடந்து கொண்டதுடன் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக சீனவுக்கு இம்மாதம் 11-ந் திகதி அனுப்பிய ஒரு ஆட்சேபகுறிப்பில் தெரிவிக்கபபட்டுள்ளது.

சீனத் துருப்புக்களின் இச்செயல் சீனர் கூறும் நேர் கட்டுப்பாட்டுக்கு தென்மேற்கே20 கிலோமீட்டர் தூரத்துக்கு சீனத் துருப்புக்கள் வாபஸ் பெற்றுவிட்டதாகத் தெரிவித்ததை பொய்யாக்கிவிட்டதென்றும் நெருக்கடி நிலையைக் குறைப்பதற்குச் சீனர் உண்மையிலேயே முயற்சி செய்யவில்லையென்றும் அந்தக் குறிப்புக் கூறுகிறது.

இதேசமயம் சீனவும் இந்தியாவுக்கு ஒருகுறிப்பு அனுப்பியுள்ளது.

கொங்காகணவாய்க்கு வடமேற்கே இந்தியத் துருப்புக்கள் ஊடுருவல் செய்ததாக அந்தக் குறிப்பில் சீன குற்றம் சாட்டியுள்ளது.

இக்குற்றச்சாட்டை இந்திய அதிகாரியொருவர் ஆதாரமற்றதென்று தெரிவித்துள்ளார். நேர்கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு மேற்கேதான் இந்தியத்துருப்பினர் இன்னமும் தங்கியுளளனரென்று அந்த அதிகாரி கூறினர்.

# மலேசியாவை ஆதரிப்பதேன்?

## இந்திய உதவி மந்திரி விளக்கம்

பாங்காக், மே 22

தென்கிழக்காசியாவில் இப்பொழுது சுற்றுப்பிரயாணம் செய்துவரும் இந்திய உதவி வெளிவிவகார மந்திரி திரு. தீனேஷ்சிங் நேற்று கோலாலம்பூரிலிருந்து பாங்காக்வந்து சேர்ந்தார். மலாயாப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானுடன் இந்திய சீனத் தகராறு சம்பந்தமாகவும் மலேசியா கூட்டரசு அமைப்பு சம்பந்தமாகவும் மனம்விட்டுப் பேசியதாக அவர் தெரிவித்தார்.

மலேசியா அமைப்பை இந்தியா ஆதரித்து வருகிறதென்றும் இக்கூட்டரசு அமைப்பினுல் விடுதலை பெறுமலுள்ள போர்ணியோ போன்ற நாடுகள் சுதந்திரம் பெறமுடியுமென்றும் திரு. தீனேஷ்சிங் தெரிவித்தார். திரு. சிங் லாவோசுக்கும் செல்லவிருக்கிறர்.

# லாவோஸில் சண்டை

வியன்டைன், மே 22

மத்திய லாவோஸில் ஜார்ஸ் சமவெளியில் நேற்றிரவு முழுவதும் துப்பாக்கிப்பிரயோகச் சத்தம் கேட்டதாக லாவோஸுக்கான சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷன் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

---

# இஸ்ரேல் ஜனதிபதி

ஜெருசலேம், மே. 22

இஸ்ரேலின் புதிய ஜனதிபதியாக 73 வயதான சஸாரை இஸ்ரேலின் பார்லிமெண்ட் தெரிவுசெய்தது.

---

# "மேற்குநாடுகள் ஒதுங்கியிருக்கட்டும்"

## காஷ்மீர் பிரச்னைபற்றி திரு. மேனன்

பம்பாய், மே 22

காஷ்மீர் பிரச்னையில் இனியாவது பிரிட்டனும் அமெரிக்காவும் தலையிடாமல் இருக்கட்டும் என்று முன்னாள் இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் கேட்டுக் கொண்டார்.

திரு. மேனன் இங்கு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் இந்தியாவுக்கு உபதேசம் செய்வதில் மேற்குநாடுகள் அதிக ஆர்வம்கொண்டிருப்பது விந்தையாக இருக்கிறதென்றும், அவர்களுடைய சொந்தப் பிரச்னைகளான பெர்லின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணமுடியாமலிருக்கையில் இதில் ஆர்வம் காட்டுவது வேடிக்கைதானென்றும் கூறினர்.

---

# லண்டனில் ஆர்ப்பாட்டம்

லண்டன், மே 22

தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையைக் கண்டித்தும் தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதங்கள் அனுப்புவதை நிறுத்தவேண்டுமெனக் கோரியும் நேற்று பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

---

# சுபந்திரியோ பிரதமருக்கு கடிதம்

ஜாகர்த்தா, மே 22

இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். சீன-இந்திய தகராறுபற்றி அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது.

---

# இடமாற்றம் அடுத்தவருடம்

யாழ்ப்பாணம், வியாழன்

தென்னிலங்கையில் உள்ள சுமார் 45 சிறுபான்மைத்தமிழ் ஆசிரியர்களை வடபகுதிக்கு மாற்றும் முயற்சி அடுத்தவருடம்வரை பின்போடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

45 ஆசிரியர்களை அடுத்த மாத ஆசிரியர் இடமாற்றத்துடன் செய்துதரும்படி சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், நல்லூர் எம். பி. டாக்டர் இ. எம். வி. நாகநாதன் ஆகியோரும், மக்கள் முன்னேற்ற மன்றத்தினரும் முயற்சிசெய்து வந்தனர். இவர்களின் கோரிக்கையை கல்விப்பகுதி ஏற்றுக்கொண்டபோதிலும் இம்மாற்றம் அடுத்தவருடமே நடைபெறும் எனத் தெரிகிறது.

# ஆப்கானிஸ்தான்-பாக் பேச்சுவார்த்தை

காபூல், மே 22

ஆப்கானிஸ்தானும் பாகிஸ்தானும் மீண்டும் தங்களுக்கிடையில் ராஜீய உறவை ஏற்படுத்திக்கொள்வது சம்பந்தமாகவும் வர்த்தகத் தொடர்புகளை ஆரம்பிப்பது சம்பந்தமாகவும் மந்திரிகள் கட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இணங்கியுள்ளன.

வியாழக்கிழமை தெஹ்ரானில் இப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவிருக்கின்றன. ஈரான் மன்னர் ஷாவின் மத்தியஸ்த முயற்சிதான் இதற்குக் காரணம்.

1961-ம் ஆண்டில் ஆப்கான் பாகிஸ்தான் ராஜீய உறவுகள் முறிந்தன.

# துருக்கியில் புரட்சி தலைவர் கைது

## மூன்று நகரங்களில் ராணுவச்சட்டம் அமுல்

அங்காரா, மே 22

துருக்கியில் ராணுவப்புரட்சி அடக்கப்பட்டுவிட்டதுடன் இப்பொழுது நிலைமை சீராகிவிட்டதாக துருக்கி அரசாங்கம் அறிவித்துள்ளது. புரட்சித் தலைவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அங்காரா ரேடியோவைச் சில மணி நேரம் கைப்பற்றி வைத்திருந்தவர்கள் கைதுசெய்யப்பட்டுவிட்டதாகவும் துருக்கிப் பிரதமர் இனேனு அறிவித்துள்ளார்.

அங்காரா, இஸ்தான்புல் முதலிய முக்கிய நகரங்களில் ராணுவச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுளளது. அங்காராவில் இரவில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகைகளும் அரசியல் கட்சிகளும் நிலைமையைக் குழப்ப முயன்ருல் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்று துருக்கி அதிபர் எச்சரித்துள்ளார்.

---

# படகு விபத்தில் 28 பேர் பலி

கல்கத்தா, மே 22

கல்கத்தாவுக்குச் சமீபத்தில் ஹூக்ளி நதியில் நேற்று ஏற்பட்ட ஒரு படகு விபத்தில் 28 பேர் நீரில் மூழ்கி மாண்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

---

# அருள் நெறிக் கழக வருடாந்தக் கூட்டம்

மாவிட்டபுரம், செவ்வாய்.

மாவை- கொல்லங்கலட்டி அருள் நெறிக் கழகத்தின் 4 வது வருடாந்தப் பொதுக் கூட்டம் வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் திரு. வ. சரவணமுத்து தலைமையில் நடைபெற்றது.

பொதுச்செயலாளர், தனதிகாரி அறிக்கைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. தலைவர் தமது உரையில், கழகத்தின் வளர்ச்சி பற்றியும் அதன் எதிர்காலப்பணிகளை எடுத்துரைத்தார். புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வ. சரவணமுத்து, உப தலைவர்கள்: திருவாளர்கள்: ஆ. கிருஷ்ணசாமி, இ. துரைச்சாமி, பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, பொதுச்செயலாளர் திரு மாவை.ந.நடராசா, நிர்வாகச் செயலாளர் திரு மு. நடராசா, துணைப்பொருளாளர் திரு. வே. வன்னியசிங்கம், ஏழுபேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது. திருவாளர்கள்: வே. சிவசுப்பிரமணியமும், பொ.நாநாயகமும், கணக்குப்பரிசோதகர்களாகத்தெரிவு செய்யப்பட்டனர். திரு. சி. சிவமகாராசா நன்றி கூறினர்.

---

# இளம் பிள்ளைவாத தடுப்பு மருந்து

யாழ்ப்பாணம், புதன்

இளம்பிள்ளை வாததடுப்பு மருந்து நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய சன சமூக நிலைய மண்டபத்தில் வருகிற வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படவிருக்கின்றது.

தொல்புரம் மத்திய சனசமூக நிலையவாசிகசாலை, கிராம முன்னேற்றச் சங்க ஆதரவில் வருகிற சனிக்கிழமை இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து விநியோகிக்கப்படவிருக்கின்றது. தொல்புரம் மத்திய சன சமூக நிலையமண்டபத்தில் இம்மருந்து விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆலய உற்சவத்தில் பஜனை

தொல்புரம், செவ்வாய்

தொல்புரம் கொட்டடி ஆதி மகாமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நடைபெற்றுவருகிறது. தொல்புரம் மத்திய சன சமூக நிலையத்தினர் ஆலய உற்சவத்தின் போது பஜனை செய்துவருகிறார்கள்.

---

# விளம்பரம் செய்தால் வியாபாரம் பெருகும்

கொழும்பு, செவ்வாய்

சிறந்த முறையில் இலங்கைத் தேயிலை பற்றி விளம்பரம் செய்தால் பிரான்ஸிற்கு இப்பொழுது ஏற்றுமதி செய்யும் தொகையைவிட இருமடங்கு ஏற்றுமதி செய்யமுடியும் என இங்குள்ள பிரஞ்சு தூதராதய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

# பிலிப்பைன்சிலிருந்து 'சிலீப்பர்' கட்டைகள்

கொழும்பு, செவ்வாய்

250,000 'சிலீப்பர்' கட்டைகளை வாங்குவதுபற்றிபிலிப்பைன்ஸ் நாட்டைச்சேர்ந்த தனிப்பட்டவர்த்தகஸ்தாபனம் ஒன்று புகையிரதப்பகுதியுடன் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றது.

உள்நாட்டில் உற்பத்தியாகும் 'சிலீப்பர்' கட்டைகள் தேவைக்குப் போதியளவு இல்லாமையாலே வெளிநாட்டிலிருந்து வாங்கவேண்டியுள்ளதாக புகையிரத இலாகாவைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

---

# பொது சேவை ஊழியர் பொழுதுபோக்கு சங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண பகுதி பொது சேவை ஊழியர் பொழுது போக்கு சங்கம் ஒன்று நேற்று மாலை 5-30 மணிக்கு யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

---

# வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையின் வருடாந்தக் கூட்டம் அடுத்த மாதம் முதலாம் திகதி வண்ணை வைத்தீசுவரவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

---

# வான் விபத்து

## 6 பேர் காயம்

யாழ்ப்பணம், புதன்

திருக்கோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த ஒரு மோட்டார் வான் புளியங்குளத்திற்கும் மாங்குளத்திற்குமிடையே விபத்துக்குள்ளானது. மூன்று பெண்கள் உட்பட பதினைந்து பிரயாணிகளுடன் வந்த இந்த மோட்டார் வானின் அச்சு முறிந்ததால் விபத்து ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இவ்விபத்தினுல் 6 பேர்காயமடைந்தனர். ஒருவர் ஆபத்து நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### மணி வாக்கு

மெஷின்கள் தேவைதான். ஆனால் அவை மனித சமூகத்துக்கு உதவியாக இருக்க வேண்டுமேயன்றி பல மனிதரின் உணவைப் பறிப்பதற்கும், ஒருசிலர் பலரைச் சுரண்டுவதற்கும் பயன்படுத்தப் படக்கூடாது.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு வைகாசி மீ 9உ (23-5-63)


## வடக்குக்கு ஒரு கைத்தொழில் பேட்டை

இலங்கையிலேயே முதல் முதலாக ஆரம்பித்துள்ள எக்கலை கைத்தொழில் பேட்டையை இவ்வாரம் திறந்து வைக்கையில் இது இந்நாட்டின் பொருளாதார சுதந்திரத்துக்கு முன்னேற்றமான ஒரு படியாகுமென்றார் பிரதமர். உள்நாட்டுக் கைத்தொழில்களை உற்பத்தி செய்வதிலும், ஆதரிப்பதிலும் அரசாங்கத்துடன் மக்கள் ஒத்துழைத்து, செலாவணியைப் பாதுகாக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். பிரதமரின் இந்த முக்கிய வேண்டுகோள் வீண்போக முடியாது.

இந்தியாவிலே இவ்வித கைத்தொழில் பேட்டைகள் பல இடங்களிலும் ஆரம்பிக்கப் பெற்று வெற்றிகரமாக நடந்து வருகின்றன. சென்னையிலே கிண்டியில் இவ்வித கைத்தொழில் பேட்டையிலே பலசிறிய கைத்தொழில்கள் நடந்து ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளித்துள்ளதுடன், பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து நாட்டின் செல்வத்தை பாதுகாத்துமுள்ளன. அதுபோல் இலங்கையிலும் சிறப்பாக யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் இவ்வித கைத்தொழில் பேட்டைகளை அரசாங்கம் ஆரம்பிப்பதால் இந்த மேலான பலன்கள் ஏற்படலாம்.

எக்கலை கைத்தொழில் பேட்டைக்கு இதுவரை 52 லட்ச ரூபாய்களை அரசாங்கம் செலவழித்துள்ளதாம். இன்னும் 18 லட்ச ரூபாய்களை செலவழிக்கவும் உத்தேசித்திருக்கிறதாம். பொதுப்பணத்திலே ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த முக்கிய ஸ்தாபனம் வெற்றி பெறுவதெல்லாம், அதில் ஈடுபட்டுள்ள சிறிய கைத்தொழில் அதிபர்களையும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குப் பொதுமக்கள் அளிக்கும் ஆதரவையும்தான் பெரிதும் பொறுத்துள்ளது. லாபத்திலே பேராசை கொள்ளாமல் கைத்தொழில் மந்திரி கூறியதுபோல் மக்களுக்குத் திறம் சரக்குகளை, கூடுமான வரை மலிவாகக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், அங்குள்ள அதிபர்கள் புதிய கைத்தொழில்களை நடத்த வேண்டும். அப்பொழுதுதான் பொதுமக்களின் ஆதரவும் கிடைத்து இந்த முயற்சி வெற்றியடைய முடியும்.

எக்கலை கைத்தொழில் பேட்டை வெற்றிபெறுமாயின் நாட்டின் மற்றப் பகுதிகளிலும் இவ்வித ஸ்தாபனங்களை ஆரம்பிப்பதாக கைத்தொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார். இது வரவேற்கத்தக்கதே. ஆனால் வேறு இடங்களில் இவ்வித ஸ்தாபனத்தை ஆரம்பிக்க எக்கலை ஸ்தாபனம் வெற்றி பெறுவதை ஒரு நிபந்தனையாகக் கொள்ளத் தேவையில்லை. இதன் வெற்றி, தோல்வி தெரிய பல வருடங்களாகலாம். எக்காரணம்பற்றியும் அங்குள்ளவரின் தவறால் அது தோல்வியடையுமாயின், வேறு இடங்களில் உள்ள மக்களை தண்டிக்கக் கூடாது. வடக்கே இயற்கை வளமும், தொழில் நுட்ப அறிவும், உழைப்புச் செல்வமும் அதிகமுண்டு. இனி அரசாங்க சேவையை நம்பாமல், தொழில் முயற்சிகளில் அதிகம் ஈடுபட வேண்டுமென்ற ஆர்வம் படித்த மக்களிடையே அதிகமேற்பட்டுள்ளது. இவ்வித விஷயங்களிலே ஆக்கமுறையில் போட்டிகளிருடபின் உற்சாகம் அதிகரித்து இம்முயற்சிகள் வெற்றிபெற அதிக வாய்ப்புண்டு. வடக்கையும், கிழக்கையும் அரசாங்கம் புறக்கணிப்பதாக ஒரு புகாருண்டு. இப்பகுதிகளில் புதிய கைத்தொழில் பேட்டையை உடன் ஆரம்பிப்பதன் மூலம் அவ்வித புகாருக்கு இடமில்லாமற் செய்வதுடன் நாட்டின் பொருளாதார சுதந்திரத்துக்கும் பெரிய உதவி செய்வதாகும்.

# தமிழுக்கு அபாயம் கிடையாது

— திரு. கே. காமராஜ் —

(தமிழ்நாடு முதல் அமைச்சர்)

தமிழ் ராஜாங்க மொழியாகிவிட்டது. ஆட்சி மொழியாக மட்டுமல்லாமல் கல்லூரிகளில் போதனா மொழியாகவும் அது தனக்குரிய சிறப்பைப் பெற்று முன்னேறி வருகிறது. தமிழ் இன்று ராஜ நடை போடுகிறது என்று சொன்னால் அது மிகையல்ல.

உண்மையில் இந்தியினால் தமிழுக்கு ஆபத்து என்று கூறுவது பொய். மக்களைக் குழப்புவதற்காகவே எதிர்க்கட்சியினர் இப்படிப் பிரசாரஞ்செய்து வருகின்றனர். ராஜாங்கமொழியாகவும் போதனா மொழியாகவும் இருந்து வரும் தமிழுக்கு இந்தியாவில் எப்படி அபாயம் வர முடியும்? இந்திக்கும் தமிழுக்கும் இப்பொழுது யாதொருவிதமான போட்டியும் விவகாரமும் கிடையாது. ஆங்கிலத்தின் இடத்தைப் பிடித்துக்கொள்ள இந்தி முயலுகிறது என்பது தான் விஷயம். அப்படி முடியுமானால் பாரத நாட்டின் பெரும்பாலான மக்கள் பேசவும் புரிந்து கொள்ளவும் கூடிய தேசிய மொழிகளில் ஒன்றான இந்தி அந்த உரிமையை அடைவதில் ஒரு தவறுமில்லை. பலமொழிகள் பேசும் மக்கள் நிறைந்த நாட்டில் ஜனநாயக அடிப்படையில் பலருக்குப் புரிகின்ற ஒரு மொழி பொது மொழியாக வந்தால் பாவமா? அதை வரவேற்பதுதானே தேசிய உணர்ச்சிக்கு அடையாளம்.

ஆனால் இந்தி மொழி தெரியாத மக்களுக்கு, இந்தி பொது மொழியாவதால் உத்தியோகம் போன்ற காரியங்களில் இடையூறு உண்டாகலாமென்று கவலைப்பட்டால் அது நியாயம். அதுதான் அப்படி யாதொரு தொந்தரவும் இந்தி பேசாத மக்களுக்கு ஏற்படாதென்று உறுதி கூறப்பட்டிருக்கிறதே. அப்படியிருக்க மறுபடியும் தமிழுக்கு ஆபத்து என்று ஒரே பல்லவியைப் பாடிக் கொண்டிருந்தால் அதற்கு என்ன பொருள். வேண்டுமென்று பொய்யை விடாப்பிடியாகப் பரப்புகிறார்கள் என்பது தானே பொருள்?

இந்தி தெரியாத மக்களின் விருப்பத்தை மதித்துத்தான் ஏற்கெனவே பெறு மொழியாக இருந்து வந்துள்ள ஆங்கிலமும் 1965–க்குப் பிறகும் நீடிக்கும்படியாக இப்பொழுது சட்டம் நிறைவேறியிருக்கிறது. இதில் புதிதாக ஏதோ அபாயம் வந்து விட்டது போல எதற்காகப் புரட்டுப் பேச வேண்டும்.

அரசியல் சட்டத்தில் 1965–ல் கட்டாயமாக இந்தியொன்று தான் பாரதத்தின் ஆட்சிப் பொது மொழியாக இருக்க வேண்டுமென்று அனைவரும் கூடித்தானே சட்டம் செய்தோம். பின்னால் அப்படிச் செய்வது அனைவருக்கும் நன்மையாக இராது என்பதனால் 1965–க்குப் பிறகும் ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று இந்தி பேசாத மக்கள் விருப்பம் தெரிவித்தார்கள். இந்த விருப்பத்தை நிறைவேற்றத்தான் இந்த ஆட்சிமொழி மசோதா சட்டமாகியிருக்கிறது.

பெரும்பாலோரின் மொழி என்பதனால் இந்தி இருக்கட்டுமென்கிறோம். பல பேருக்கு அந்தமொழியில் இன்னும் பற்று வரவில்லையென்றால் கூடவே ஆங்கிலமும் இருந்து வரட்டும் என்கிறோம். மறுபடியும் பத்து வருடங்களுக்குப் பிறகும் ஆங்கிலம் இருந்து வரத்தான் வேண்டுமா என்பதை விசாரித்து முடிவு செய்யலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் என்ன குடி முழுகிப்போய் விட்டது. அப்பொழுது ஆங்கிலம் மேலும் நீடிக்கத்தான் வேண்டுமென்றால் அப்படியே செய்துவிட்டுப் போகிறோம். சட்டங்கள் எல்லாம் மக்கள் கூடிச் செய்வது தானே? இன்றைக்கானாலும் பத்து வருடங்களுக்குப் பிறகானாலும் முடிவு செய்யும் அதிகாரம் எப்பொழுதும் மக்கள் கையில் இருக்கும் போது என்ன அபாயம் வந்துவிட முடியும்? எனவே இதில் கட்டாயமாக யாரையும் நிர்ப்பந்திப்பதாகச் சொல்ல இடம் எங்கே இருக்கிறது?

பத்து வருடங்களுக்குள் இந்திக்காரர்கள் வலிமையடைந்து 1975–ல் மறுபரிசீலனையின் போது நம்மை யெல்லாம் அவர்கள் ஏமாற்றி விடுவார்கள்என்று ஒரு பூச்சாண்டி காட்டுகிறார்கள்.ஒருநாளும் நம்மையாரும் ஏமாற்றவோ நிர்ப்பந்திக்கவோ முடியாது. இந்தக் கூக்குரலை எழுப்புகிற பேர்வழிகள் தான் உலகையே ஏமாற்ற எண்ணிக் கொண்டிருக்கிறவர்கள். இன்றைக்கு ஆட்சிமொழி அபாயம் என்கிறார்கள். அத்துடன் விடுவார்களா? தங்கப் பிரச்னை யென்கிறார்கள்—இல்லாவிட்டால் வரிப்பிரச்னை யென்கிறார்கள். எதையாவது சொல்லி மக்களைத் தங்கள் பக்கம் திருப்பவேண்டும். அவ்வளவுதான். அவர்களுக்கென்ன? நிர்வாகம் செய்கிற பொறுப்பில் உள்ளவர்களுக்குத் தானே கவலை.

காங்கிரஸைப் பொறுத்தவரை இந்த நாட்டிலுள்ள பல்வேறு பிரிவுகளும் ஒத்துப்போய் ஒற்றுமையாகவும் சுபிட்சமாகவும் வாழ வேண்டுமென்பது தான் குறிக்கோள். நாடு பிரிய வேண்டுமென்று கூறிக் கொண்டிருப்பவர்களும் நாளைக்கொரு விவகாரத்தைக் கிளப்பிக்கொண்டு ஒற்றுமைக்கு உலை வைப்பவர்களும் எழுப்புகின்ற கூச்சல்களுக்கும் மக்கள் ஒரு நாளும் செவிசாய்க்கப் போவதில்லை. ஏனென்றால் இவர்கள் கிளப்புகின்ற பிரச்னைகள் எல்லாம் ஒருசிலருடைய பொழுது போகாத பிரச்னைகளே தவிர மக்களின் வாழ்க்கைப் பிரச்னைகள் அல்ல. ஒரு பக்கம் சீன ஆக்ரமிப்பு—மறுபக்கம் பாகிஸ்தான் தகராறு—பிறிதொரு பக்கம் அடிப்படையான அபிவிருத்திக்கான பொருளாதாரத் திட்டங்கள். இவ்வளவையும் ஈடு கொடுத்து மக்களின் நல்வாழ்வுக்குப் பாடுபட்டு வருகிறது காங்கிரஸ்.

## மழையால் புகையிரதம் தாமதம்

கொழும்பு, புதன்

கரையோரப் பகுதியிலுள்ள புகையிரதப் போக்கு வரத்து பலத்த கடலரிப்பு காரணமாக தாமதிக்கப் பட்டது. இந்த கடலரிப்பு வெள்ளவத்தைக்கும் கல்கிசைக்கும் இடையில் ஏற்பட்டுள்ளது.

வெள்ளவத்தைக்கும், கல்கிசைக்கும் இடையிலுள்ள புகையிரத சேவை ஒரு பாதை மூலமே நடத்தப்படுமென்றும், மற்றப்பாதை கடலரிப்பால் பழுதடைந்துள்ளதாகவும், புகையிரத அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கல்கிசைக்கு அருகில் இரண்டு இடங்களில் சேதம் ஏற்பட்டுள்ளது. புகையிரதப் பாதைக்கு மேலாக கடல் தண்ணீர் செல்லுவதால் ஒரு பாதை பாவிக்க முடியாத நிலையிலிருக்கிறது.

புகையிரதங்கள் தாமதிக்கப் படுவது,தவிர்க்கமுடியாததாயிருந்தாலும் உத்தியோகத்தர்கள் செல்லும் புகையிரதமும், வேறு முக்கிய புகையிரதங்களும் வழக்கம் போல ஓடும் என்று புகையிரத அதிகாரி தெரிவித்தார்.

## சனசமூக நிலையம் நிறுவ முயற்சி

காரைநகர், புதன்

காரைநகர் கோவளம் பகுதியில் சனசமூக நிலையம அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது சம்பந்தமாக கோவளம் இளைஞர் முன்னேற்றச் சங்கம் மெலிஞ்சியோடை மைதானத்தில் பொதுக்கூட்டமொன்றினை நடத்தியது.

## கோர்ட்டிற்குள் சிரிக்கக்கூடாது

### நீதிபதி எச்சரிக்கை

பாணந்துறை, புதன்

'நீதிமன்றம் பெண்கள் சிரிப்பதற்குரிய இடமல்ல' என்று பாணந்துறை கூட்டு மாஜிஸ்டிரேட் திரு. எஸ். யோகநாதன் கோர்ட்டில் ஆஜரான, பாணந்துறை ஆஸ்பத்திரி நர்ஸிடம் கூறிய சம்பவமொன்று நடைபெற்றது.

திருமதி ஸிரெல்ல, மோடி டிபெயர் என்னும் நர்ஸ், கோர்ட்டிற்குள் வந்ததும் நீதிபதியைப் பார்த்து சிரித்த போதே மேற்படி கூறினர்.

அதன் பின் மொழிபெயர்ப்பாளர் மூலம் மாஜிஸ்டிரேட், அப்பெண் யார் என்பதை அறிந்து, இன்னுமொரு தடவை அப்படி நடந்தால் கடுமையான நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

திருமதி டிபெயர், தனது கணவன் சார்ல்ஸ டிபெயருடன் வழக்குச் சம்பந்தமாக வந்திருந்தார்.

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்திலே பெண்கள் பொதுவாக நாடகமேடை ஏறி நடிக்க முன்வருவதில்லை என்று ஒரு குறை இருக்கிறது. ஒரு நாடகசபையினர், பத்திரிகையில் விளம்பரம் செய்தும், ஒரு பெண்மணிகூட நடிக்க முன்வரவில்லை. என்று சில நாட்களுக்குமுன் என்னிடம் ஓரன்பர் தெரிவித்தார். ஆனால் இக்குறை திவ்யஜீவன சங்க ஆதரவிலே சென்ற செவ்வாயன்று நகரமண்டபத்தில் நடைபெற்ற 'பக்த மீரா' நாடகமூலம் வெகுவாகத் தீர்ந்தது.

இதில் நடித்த பெண்களில் பலரும் மேடை ஏறியது இதுவே முதல் தடவையாம். என்றாலும், மேடைக் கூச்சமின்றி, பாடியும், நடித்தும், நடனமாடியும் ரஸிகமக்களின் பாராட்டுதலைப்பெற்றது குறிப்பிடத்தக்கது.

எந்தக் கலையும் பெண்களால்தான்பொதுவாக அழகும் சிறப்பும் பெறுவதாக இருக்கின்றது. அதனால்தான் ஒரு பெண்ணே கலைத் தெய்வமாக இருக்கிறார்போலும். சிறப்பாக நாடகத்தில் பெண்பாகத்துக்குப் பெண்ணே வந்து நடிப்பதுதான் இயற்கையாகும். இங்கு நாடகசபைகள் பல இருந்தும், பெண்பாகத்துக்குத் தக்கவர்களை அமர்த்த முடியாமல் அதிக சிரமப்படவேண்டியுள்ளது பகிரங்க ரகசியம். ஒரு பெண்மணியைக் காரியதரிசியாகக் கொண்டதால், யாழ்ப்பாண திவ்ய ஜீவன சங்கம், பல பெண்களின் ஒத்துழைப்பையும், "சிரமதானத்"தையும் வெற்றிகரமாகப் பெறக்கூடியதாக இருந்தது போலும். பல சோதனைகள் ஏற்பட்டிருந்தும், இந்த முதல் முயற்சியை வெற்றிகரமாக நிறைவேற்றியமைக்காக, சிறப்பாக காரியதரிசி ஸ்ரீமதி இராசையா அவர்களை பாராட்டவேண்டும்.

இங்கு சென்ற மூன்றுவருட காலமாக திவ்யஜீவன சங்கம், ஒவ்வொருவாரமும் ஒரு வீட்டில் கூட்டுப்பிரார்த்தனையை ஒழுங்காக நடத்தி வருகிறது. சங்கத்தின் கட்டிட உதவி நிதிக்காகவே இந்நாடகமும் நடைபெற்றுள்ளது. பிரார்த்தனையென்றால் மக்கள் குறைவாகவே வருவர். ஆனால் நாடகமென்றால் அதுவும் பெண்கள் நடிப்பதாயின், மண்டபம் தாங்காமல் கூட்டம். நாடகக்கலைமூலம், தெய்வீகத்தைப் பரப்ப நல்ல வாய்ப்புண்டென்பது அன்று தெரிந்தது. மலைபோன்ற பல சோதனைகளையும் சமாளித்து, வெற்றிகரமாக இச்சங்கம் தொண்டாற்றி வருவதற்கு, திருவருளும், ரிஷிகேஷ முனிவரின் குருவருளும் பூரணமாகத் துணை நிற்கின்றதென்பதில் சந்தேகமில்லை.

* * *

கோவிலுக்கு, சுவாமிக்கு என்றால் நம் தாய்மார்கள் எதுவும் கொடுத்துவிடுவார்கள். இங்கு ஒரு கோவிலுக்கு அபிஷேகத்துக்கு இளநீர் வேண்டுமென்று கூறி, சிலர் சில வீடுகளுக்குச் சென்று கேட்டு, குலைகளை வெட்டிக கொண்டு போய் கடைகளில் விற்றுவிடுவதாக நேற்று ஓரன்பர் கூறினர். கையும் மெய்யுமாக ஒருவனைப் பிடித்ததும் 'நான் செய்தது குற்றம்தான்' என்று சொல்லி தப்பிவிட்டானும். மற்றவர்களும் உஷாராக இருக்க, இதைப் பேப்பரில் போடச் சொன்னர் அந்த அன்பர்

* * *

இல்லானை எவ்விடத்தும் உள்ளான்தன்னை இனிய நினையாதார்க்கின்னாதானை, வல்லானை வல்லடைந்தார்க்கருளும் வண்ணம் மாட்டாதார்க்கெத்திறத்தும் மாட்டாதானைச்,

(5-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் வங்கியில் கடனுதவி பெறுவதில் ஏழைகளின் கஷ்டம்

## கூட்டுறவு சங்கம்மூலம் உதவிவழங்க திட்டம்

மாரவில்லா, புதன்

"ஏழைகள் தமது வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வாய்ப்பளிக்கும் விதத்தில் நிதி உதவி செய்வது மக்கள் வங்கியின் குறிக்கோள்களில் ஒன்று இருந்தபோதிலும் இங்குள்ள மக்களின் பெரும்பாலோர் இவ்வித நிதியுதவி பெற முடியாதிருக்கிறது. மக்கள் வங்கியின் பாதுகாப்பு விதிகளுக்கு இவர்கள் ஒத்துப்போகக்கூடிய வசதிகள் இவர்களிடம் இல்லாதிருப்பதால் இவர்கள் மக்கள் வங்கியிலிருந்து கடன் உதவி பெற முடியாதிருக்கிறது.

மக்கள் வங்கியிலிருந்து கடன்பெற விரும்புபவர்களுக்கு வருமானவரி செலுத்தும் இருவர் உத்தரவாதமளிக்கும் விதத்தில் கையொப்பமிட வேண்டும்.

பணம் தேவைப்படும் ஏழைகள் செல்வந்தரையோ நடுத்தர வகுப்பைச்சேர்ந்தவர்களையோ இவ்வித கையொப்பம் பெறுவதற்கு அணுகினால் அவர்கள் தாம் ஏற்கனவே வேறு பலருக்கு கையொப்பமிட்டுவிட்டதாகக் கூறிவிடுகிறார்கள். சிலர் தாம் அவ்விதம் கையொப்பமிட முடியாதென மறுத்துவிடுகிறார்கள். இவ்விதம் கையொப்பமிடுவதால் தமக்கு ஏதேனும் சங்கடம் வந்துவிடுமோ என எண்ணுவதாலேயே இவர்கள் இவ்விதம் மறுத்துவிடுகின்றனர். இதனால் ஏழைகள் மக்கள் வங்கியிலிருந்து பணம்பெறுவது சாத்தியமாகாததாகிவிடுகிறது.

### 'நோக்கம் வெற்றியுறவில்லை'

மக்களுக்குதவ ஆரம்பிக்கப்பட்ட மக்கள் வங்கியிலிருந்து பணம் தேவைப்படுபவர்கள பணம் பெற முடியாதிருப்பதால் மக்கள் வங்கியின் நோக்கம் தோற்றுவிட்டதென பணம் தேவைப்பட்டுப் பெற முடியாத பலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

இவ்விதம் மக்கள் வங்கியிலிருந்து கடனுதவி பெறமுடியாதவர்கள் தேவைப்படும் பணத்தை வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களிடமிருந்து பெறுகிறார்கள். இவ்விதம் பெறும் பணத்துக்கு இவர்கள் அதிக வட்டி செலுத்தவேண்டியுள்ளது.

இது சம்பந்தமாக மக்கள் வங்கித் தலைவர் திரு. வின்சன்ட் சுபசிங்காவிடம் விசாரித்தபோது அவர், பணம் தேவைப்படும் ஏழைகள் மக்கள் வங்கியிலிருந்து கடன் பெறுவதில் அடையும் கஷ்டங்கள் பற்றித் தாம் அறிவதாகத் தெரிவித்தார்.

திரு. சுபசிங்கா இதுசம்பந்தமாக மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் வங்கி தான் வழங்கும் கடன் பணத்துக்கு ஒருவித பாதுகாப்பு பெறுவிட்டால் வங்கி விரைவில் வங்குரோத்தாகிவிடும். தற்போதுள்ள விதிகளைத் தளர்த்தி அதிக மக்கள் பயன்பெறத்தக்க வழிவகைகள் பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இலங்கையில் சுமார் 30,000 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றுள் 120 சங்கங்களே மிக நல்லமுறையில் இயங்கிவருவதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இந்த 120 சங்கங்களும் மக்கள வங்கி ஏஜண்டுகளாக இயங்கிவர நான் திட்டமிட்டுள்ளேன். இவை ஒவ்வொன்றும் ஆரம்பத்தில் ரூ. 20,000 கொடுக்கப்படும். இந்தச் சங்க அங்கத்தவர்கள் சங்கத்தின்மூலம் நிதி உதவியைப்பெறலாம்.

மக்கள்வங்கி இதுவரை 20,000 பேருக்கு கடனுதவி அளித்துள்ளது. விவசாயத்துறையிலும் கைத்தொழில் துறையிலும் இவ்வித உதவிகள் பயன் படுத்தப்பட்டுள்ளன. வீடு கட்டுவதற்கும், வீட்டுத் தளபாடங்கள் வாங்குவதற்கும் கடனுதவியளிக்கப்பட்டுள்ளது. பயனுள்ள துறைகளுக்கு கடனுதவி வழங்குவதில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் உதவி வழங்கும் திட்டம் பெரும்பான்மையான ஏழை மக்களுக்கும், விவசாயிகளுக்கும் உதவியளிக்குமென தான் நம்புவதாக திரு. சுபசிங்கா தெரிவித்துள்ளார்.

# இலங்கை திரும்பிய பின்னரே 'பென்ஷன்' கொடுக்கப்படும்

## வெளிநாடு சென்றுள்ள ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகஸ்தர் களுக்கு

கொழும்பு, புதன்

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்று தற்பொழுது இந்தியாவில் வசித்துவரும், இலங்கையர்களுக்கு, அங்கே 'பென்சன்' வழங்கப்படமாட்டாது. அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்று அவுஸ்திரேலியாவிற்கு சென்றுள்ளவர்களுக்கும் ஒரு புதிய திட்டத்தை கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அயல்நாட்டு செலாவணியை கட்டுப்படுத்துவதற்காகவே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின்படி இவர்களின் பென்சன் ஒன்றுகச் சேர்க்கப்பட்டு, இலங்கைக்கு வந்தபின்பே அவர்களுக்கு கொடுக்கப்படும். அடுத்தமாத ஆரம்பத்தில் இத்திட்டம் நடைமுறைக்குவரும். இலங்கையிலே அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்று தற்பொழுது இந்தியாவிலிருக்கும், இந்தியர்களுக்கு, அங்கே பென்சன் வழங்கப்படும். இந்தியர்கள் என்று அவர்கள் நீதிபதியொருவரால், அத்தாட்சிப்படுத்தப்பட்டு, திறைச்சேரிக்கு அறிவித்தபின்பே அவர்களுக்கு பென்சன் வழங்கப்படும்.

இப்புதிய திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வருவதை அக்டோபர் மாதம் 1-ம் திகதி வரை ஒத்திப்போடும்படி, அநேக இந்தியர்கள், திறைச்சேரி காரியதரிசியை கேட்டுள்ளார். குறைந்தகால அறிவித்தலின் பேரில், நீதிபதியிடம் அத்தாட்சிப் பத்திரம் எடுப்பது கஷ்டமாக இருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார்கள். அவர்களின் வேண்டுகோள், செலவாணி கட்டுப்பாடு அதிகாரிக்கு தேவையான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, தெரிவிக்கப பட்டுள்ளது.

அரசாங்க சேவையிலிருந்து 55 வயதிற்குமுன் ஓய்வுபெற்று, தற்பொழுது இந்தியாவிலிருக்கும், இலங்கையர்களுக்கு, அவர்களின் 'பென்சன்' 55 வயது வந்தபின்பே கொடுக்க வேண்டுமென திறைச்சேரி தீர்மானித்துள்ளது

## ரூ. 4250 கள்ள...

(1-ம் பக்க தொடர்ச்சி)

திலிங்கமும் காரிலிருந்து இறங்கி மாதிரி நோட்டுக்கொண்டு வரப்போவதாகக் கூறி ஒரு ஒழுங்கையால் சென்றார்கள். சிறிது நேரத்தில் இரண்டு 50 ரூபா நோட்டுகளுடன் திரும்பி வந்து இதுதான் மாதிரிநோட்டுகள் என்றார்கள். நான் வாங்கிப்பார்த்துவிட்டு பாஸ்கரனுக்கும் மெண்டிசுக்கும் காட்டினேன். பின்னர் அவர்களிடம் காசு நல்லாக இருக்கிறது. நீங்கள் 3000 கொண்டுவாருங்கள் என்றேன். அவர் சிறிது தூரம் சென்றுவிட்டு திரும்பி வந்து வந்தவழியால் சென்றார்கள். சிறிது நேரத்தில்நாங்கள் பின்தொடர்ந்து சென்றோம். சண்முகரத்தினம் வீட்டில் சென்றோம். சண்முகரத்தினத்தின் வீட்டில் இருந்துசண்முகரத்தினமும் கதிரேசுவும், வைத்திலிங்கமும் பணத்தை எண்ணிக் கொண்டிருந்தார்கள். பாஸ்கரனும், மெண்டிசும் தாங்கள் பொலிஸ்காரர் எனக் கூறிக் கொண்டு காசை எடுத்தார்கள். மெண்டிஸ் வைத்திலிங்கத்திடம் இருந்த பணத்தை எடுத்தார். பாஸ்கரன் கதிரேசுவிடம் இருந்த பணத்தையும் நான் சண்முகரத்தினத்திடம் இருந்த பணத்தையும் எடுத்தேன். கட்டிலில் இருந்ததையும் மெண்டிஸ் எடுத்தார். எல்லாமாக 4250 ரூபா மூவருடைய கையிலிருந்தும் எடுத்தோம். பின் சண்முகரத்தினத்தின் வீட்டைப் பரிசோதித்தோம். அங்கு ஒன்றும் அகப்படவில்லை. பின்னர் பருத்தித்துறை திரும்பினோம். திரும்பும் வழியில் கல்வியங்காட்டில் கதிரேசுவின் வீட்டையும் தும்பளையில் வைத்திலிங்கத்தின் வீட்டையும் பரிசோதித்தோம். ஆனால் பணம் கிடைக்கவில்லை. நான் பருத்தித்துறைப் பொலிசில் வாய்முறைப்பாடு கொடுத்தேன்.

சாட்சி எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களால் குறுக்கு விசாரணை செய்யப் பட்ட போது "நான் இச்சம்பவத்தைப்பற்றி இருதடவை பொலிசில் வாக்குமூலம் அளித்துள்ளேன். போலி நோட்டில் சிங்கம் தெளிவாக இல்லை. பேப்பர் நல்லதாக இல்லை. உண்மையான 50 ரூபா நோட்டிற்கும் போலி நோட்டிற்கும் வித்தியாசம் இருப்பதாக பார்வையிலேயே தோன்றும் என்று கூறினர்.

நீதிபதி மேல்விசாரணையை அடுத்த மாதம் 14-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

பருத்தித்துறை பொலிஸ நிலைய பொறுப்பதிகாரி திரு. க. கந்தையாவழக்கை நடத்தினார். முதலாம் எதிரிசார்பில் திரு. எம். வேலும்மயிலும் 2-ம் எதிரிசார்பில் திரு. என். நடராசாவும் 3-ம் எதிரி சார்பின் திரு. எஸ். சி. கதிரவேலுவின் அனுசரணையுடன் திரு. கே. வி. என். சண்முகநாதனும், 4-ம் 5-ம்எதிரிகள் சார்பில் திரு. எஸ். சி. கதிரவேலுவும் ஆஜரானர்கள்.

---

# வலி கிழக்கு உபவிழா

யாழ்ப்பாணம், புதன்

வலி. கிழக்கு சனசமூகநிலையங்களின் சமாச உபவிழாப் போட்டிகள் கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் நடைபெற்றது.

சனிக்கிழமை காலை 9 மணியளவில் வலி-கிழக்குக் காரியாதிகாரி திரு. நா. வேதாரணி சேயோன் இயல், இசை,நாடக அரங்கைத் திறந்துவைத்துப் பேசுகையில் கிராமங்கள் தோறும் சனசமூகநிலையங்கள் சீராக நடைபெற்றுவருவதைக் காணும்போது மனமகிழ்ச்சி அடைவதாகவும், இவ்விதம் நிலயங்களின்மூலம் மக்களுக்கு சிறந்த சேவைசெய்ய முடியுமெனவும் கூறினர்.

மேற்படி விழாவுக்கு கல்லூரி அதிபர் திரு. சு. குமாரசுவாமி தலைமைதாங்கினர். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

பாடசாலையில் பிள்ளைகள் பயின்றுகொண்டிருக்கும் போது, பாடசாலைவிட்டதும் தங்கள் வீடு சென்று அறிவு நூல்களைப் படிப்பதன்மூலம் அறிவை நன்கு பாதுகாத்துக் கொள்ளலாம் தற்போது சனசமூகநிலையங்கள்மூலம் பாமர மக்கள் அறிவை வளர்த்துக் கொள்ளக்கூடியதாக விருக்கின்றது. சனசமூகநிலையங்களின் உத்தியோகத்தர் தெரிவின் போது தலைவர், காரியதரிசி போன்ற பதவிகளுக்கு மோகங் கொள்வது மிகவும் கவலைக்கிடமானதாகும்.

இயல், இசை, நாடக அரங்குப் போட்டி முடிவு விபரம் வருமாறு:

1. நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய மாதர் சனசமூகநிலையம், 2. கோப்பாய் சபாபதி நாவலர் சனசமூகநிலையம், 3. கோப்பாய் அம்மன் கோவிலடி சனசமூகநிலையம்.

விளையாட்டுப்போட்டி முடிவுகள்:

1. ஸ்ரீ சுப்பிரமணிய மாதர் சனசமூகநிலையம், நீர்வேலி, 2. பூமகள் சனசமூகநிலையம் சிறுப்பிட்டி, 3 சரஸ்வதி சனசமூகநிலயம், ஆவரங்கால்.

# கூப்பன் அரிசியின் விலையை அதிகரிக்க மாட்டேன்

## நிதி மந்திரி கலுகல்லே அறிவிப்பு

கேகாலை, புதன்

"மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இலங்கையின் வாழ்க்கைத் தரம் உலகிலே மிகக் குறைவாகக்காணப்படுகிறது. ஏழைமக்களைப் பாதிக்கக்கூடிய வகையில் நான் அரிசி விலையை அதிகரிக்க மாட்டேன்" என்று நிதிமந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லே இரியகமவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டார்.

இக்கூட்டம் திரு. ஈ. ஆர். திக்கிரிபண்டா சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டதை பாராட்டும்முகமாக, கிராம மக்களால் நடத்தப்பட்டது.

திரு. கலுகல்லே தொடர்ந்து கூறியதாவது, இலங்கையில் பதவிக்குவந்த அரசாங்கங்களில் மக்களின் அபிப்பிராயங்களை கவனிக்கும் ஒரே ஒரு அரசாங்கம், எங்களுடைய அரசாங்கம்தான் பொதுமக்கள் அபிப்பிராயத்திற்கு மாறாக அரசாங்கம் எதுவுமே செய்யவில்லை. கடந்த வருடத்திலும் பார்க்க இவ்வருடம் முன்னேற்ற வேலைகளுக்காக எல்லாத் தொகுதிகளுக்கும், இலாகாக்களுக்கும், அதிக பணம் ஒதுக்கத் தீர்மானித்திருக்கிறேன். முன்னேற்ற வேலைகளுக்காக 5 கோடி ஒதுக்கத் திட்டமிட்டுள்ளேன்.

வருமானத்திலும் பார்க்க செலவு அதிகரித்துள்ளதால் அடுத்த வருட வரவு செலவு திட்டத்தில் சுமார் 6 கோடி ரூபா துண்டுவிழும் வரவுக்கும் செலவுக்கும் உள்ள வித்தியாசத்தை நிறைவேற்றக்கூடிய திட்டம், மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

நான் அரிசி விலையை கூட்டப்போவதாக யு. என். பி. கட்சியினர் நினைத்திருக்கிறார்கள் அரிசியின் விலை 10 சதம் அதிகரிக்கப்பட்டால் 90 லட்சம் ரூபா சேமிக்கலாம். ஒரு புசல் நெல்லை 2ரூபா வீதம் குறைத்து வாங்கினால் 55 லட்சம் ரூபாவை அரசாங்கம் சேமிக்க முடியும்

ஆனால் நிதிமந்திரி என்ற நிலையில் நான் ஏழை மக்களுக்குஉள்ள கஷ்டத்தை நன்கு அறிவேன் ஏனெனில், நான் கிராமத்தில் சாதாரண குடும்பத்திலிருந்தே இந்த நிலைக்கு வந்தேன். ஏழை மக்களுக்கு நான் என்றும் தாங்கமுடியாத கஷ்டத்தைக் கொடுக்கமாட்டேன்.

1952-ம் ஆண்டு நாடு பொருளாதார நிலையில் பின்னோக்கியிருந்தபோது யு. என். பி. அரசாங்கம் அரிசியில் அரைவாசியை குறைத்ததோடு சீனி விலையில் 25 சதம் அதிகரித்தது.

1953-ம் ஆண்டு நாட்டின் நிலை விருத்தியடைந்தபோது யு. என். பி. அரிசி விலையை 75 சதமாக அதிகரித்தது புதிதாக கட்டடங்கள் கட்டப்படுவதை நிறுத்தியதோடு பாடசாலை பிள்ளைகளின் மதிய உணவையும் நிறுத்தி 10 லட்சம் ரூபா சேமித்தது.

முதலாளி வர்க்கமும், முதலாளி வர்க்க பத்திரிகைகளும் தற்பொழுது அரசாங்கத்துக்கு எதிராக வேலைசெய்கிறது. பத்திரிகைகள் பொதுமக்களை ஏமாற்றுவதை அதிக காலம் நீடிக்கவிடமாட்டேன். இதனால் தான் அரசாங்கம் சினிமாப் படம் மூலம் பொதுமக்களுக்கு அரசாங்கம் செய்த முன்னேற்ற வேலைகளையும் திட்டங்களையும் காட்டிவருகிறது.

---

# தலைமை ஆசிரியை இடமாற்றம்

யாழ்ப்பாணம், வியாழன்

பெரும்பான்மையான பெற்றோர்கள் செய்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து ஈவினை விக்கினேஸ்வரா வித்தியாசாலைத் தலைமை ஆசிரியை அச்செழு மிஷன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அச்செழு மிஷன் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. செல்லையா ஈவினை விக்னேஸ்வரா வித்யாசாலைத் தலைமையாசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# ஐயா றன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லாத செந்நெறிக்கே செலப்பானை திருப்புன்கூர் மேவிய சிவலோகனை, நெல்லால்விளை கழனி நீடூரானை நீதனேனென்னே நான் நினையாவாறே.

— திருநாவுக்கரசர்.

# உலக்கையால்...

(2-ம் பக்க தொடர்ச்சி)

யாதலால், காலஞ்சென்றவர் வேலைக்குப் போகவில்லை. காலை சாப்பாட்டை முடித்துக் கொண்டுசென்றவர், மாலையில் வீடுவந்தார். அவர் குடித்திருந்தார். எங்களை எல்லாம் பேசக்கூடாதவார்த்தைகளால் பேசினர். எனது கன்னத்தில் ஒருதடவை அடித்தார். அதன் பின் அவரது மனைவி சரசுவதியைப் பேசிவிட்டு, நீ உனது மகளை கந்தையாவிற்கு முடித்துக் கொடுத்துவிட்டாய் நீயும் அவர்களுடன் போய் இரு' என்று கூறினர்.

இறந்தவரை வேறுயாரும் அடிக்கவில்லையென்றும், கந்தையா ஒரு அடிமட்டும் அடித்தாரென்றும், சரசுவதி கணவனைத் தாக்கவில்லையென்றும், நீதிபதி கேட்டபோது சாட்சி தெரிவித்தார்.

இவ்வழக்கு ஜூன் மாதம் 5-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

---

# பொதுக்கூட்டம்

தோப்புக்காடு முருகன் பலநோக்கக் கூட்டுறவுச சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஜூன் மாதம் இரண்டாம்திகதி திரு. கே. குமாரகுரு தலைமையில் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. கே. எஸ், பொன்னுத்துரை, உப உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள், திரு. எஸ். பி. பரமநாதன் திரு. கே. சிவப்பிரகாசம் ஆகியோர் சமூகத்தில் நடைபெறவிருக்கிறதாகத் தெரிவிக்கப்படுகிறது

# மங்கையர் ★ ★ உலகம்



## பெண் விரிவுரையாளர்கள்

பல்கலைக் கழகங்களில் பெண்களை ஆசிரியைப் பதவியில் அமர்த்த இன்னும் ஆட்சேபங்கள் இருந்துவருகின்றன என்பது தகவல் விசாரணை ஒன்றிலிருந்து தெரியவருகிறது. "திறமையிலோ புத்திசாதுர்யத்திலோ நாங்கள் குறைந்தவர்கள் அல்ல; ஆனால் நாங்கள் போட்டியிடுவதை எங்கள் ஆண் சகாக்கள் விரும்புவதில்லை என்று சில ஆசிரியைகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். மேற்கு ஜெர்மனியில் ஆசிரியர்கள் பதவிக்கு ஏராளமாக ஆட்கள் இன்று தேவைப்படுகிறது என்பதுதான் உண்மையான நிலை.

பல்கலைக்கழகங்களில் பெண் விரிவுரையாளர்களை அதிகரிக்கலாமா? என்ற கேள்வியை டாக்டர் ஸ்கிண்ட்லெர் பல பேர்களிடம் கேட்டார். 138 பேர்கள் வேண்டாம் என்று கூறிவிட்டனர், 139-வது நபர் அதிகரிக்கவேண்டும் என்று பதிலளித்தார். அவர் ஒரு ஸ்திரீ.

கோலோன் சோஷாலஜிஸ்ட் டாக்டர் ஸ்கிண்ட்லெர் நடத்திய இந்த தகவல் விசாரணை பற்றிய விவரங்களை ஜெர்மன் பல்கலைக்கழக சஞ்சிகை பிரசுரித்துள்ளது. பெண்களைப் பல்கலைக்கழக ஆசிரியைகளாக நியமிக்கவேண்டாம் என்பதற்குக் கூறப்பட்ட காரணங்கள் எழுபது வருடங்களுக்குப் பாரிஸில் இதே விஷயத்தில் கூறப்பட்ட காரணங்களைப் போலவே விளங்கியது.

அன்று மேடம் க்யூரி என்பவரை பல்கலைக்கழக ஆசிரியையாக நியமிக்க பாரிஸிலுள்ள ஸோர்போன் பல்கலைக்கழக பேராசிரியர்கள் பலத்த எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்கள் தெரிவித்த காரணங்கள் இவைதான்:-

"பெண்களுக்கு புத்தி சாதுர்யம், தானாகவே உருவாக்கும் சக்தி, உடல் பலம், போதிய அதிகாரம் இவை எல்லாம் போதாது. பெண்கள் எந்த முக்கியமான காரியத்திற்காக இவ்வுலகில் படைக்கப்பட்டனரோ அந்த லட்சியம் அவர்களை இந்த வேலைக்கு வைப்பதால் கெட்டுவிடும் என்பது இவர்களுடைய முக்கிய எதிர்ப்பு.

ஆனால் மேற்கு ஜெர்மனியில் நியமிக்கப்பட்ட அதிகாரபூர்வமான பல்கலைக் குழுவினர் இம்மாதிரியான கருத்துக்களை மனதில் கொள்ளாமல் ஸ்திரீகளுக்கான பல்கலைக் கற்கம் அமைப்பதுபற்றிக் கவனித்திருக்கிறார்கள். அநேக வருடங்களுக்கு முன், மேற்கு ஜெர்மனியிலுள்ள 48 பல்கலைக்கழகம், சர்வகலாசாலை, கல்லூரிகள் இவைகளின் தலைவர்கள் கூடி, பல்கலைக்கழக ஆசிரியர்கள் பதவிகளுக்கு ஸ்திரீகளை நியமிக்க வேண்டும் என்று சிபார்சு செய்திருந்தனர்.

பல்கலைக்கழகங்களில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. 1961-63-ல் மேற்கு ஜெர்மனியிலும் மேற்கு பெர்லினிலுமுள்ள பல்கலைக் கழகங்களில் 2,45,000 மாணவர்கள் சேர்ந்திருக்கின்றனர். பல்கலைக்கழக ஆசிரியர்கள் எண்ணிக்கையை 17,400 லிருந்து 25,000 க்கு அதிகரிக்க வேண்டும் என்று மூன்று வருடங்களுக்கு முன்னமேயே முடிவு செய்யப்பட்டது. போதிய நிதி வசதி இல்லை என்பதைக் காட்டிலும் தக்க யோக்கியதாம்சமுள்ளவர்கள் இப்பதவிகளுக்கு அகப்படுவது துர்லபமாகிவிட்டது.

ஜெர்மன் விஞ்ஞானக் கௌன்ஸில் இந்த நெருக்கடியைத் தீர்க்க வெளியிட்டுள்ள யோசனைகளாவன:-

அயல்நாட்டு பல்கலைக்கழகப் பேராசிரியர்களை அதிக அளவில் விருந்தினர் ஆசிரியர்களாக அழைக்கவேண்டும். பெரிய அதிகாரத்திலுள்ளவர்கள், நீதிபதிகள் ஆகியவர்களை அழைத்து பிரசங்கங்களைச் செய்யச் சொல்லவேண்டும். ஸ்திரீகளில் தக்க யோக்கியதாம்சம் உள்ளவர்களை ஆசிரியைகளாக நியமிக்கவேண்டும். இந்த யோசனைகளைப் பல்கலைக் கழகங்களுக்கு விஞ்ஞானக் கௌன்ஸில் சிபார்சு செய்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் படிப்பவர்களில் 100 க்கு 20 பேர் பெண்கள். இவர்கள் ஆசிரியைகளாக விளங்கப் பயிற்சியளிக்கப்படவேண்டும் என்று செய்யப்பட்ட சிபார்சுமட்டும் அங்கீகரிக்கப்படவில்லை. பல்கலைக் கழகத்தில் ஆசிரியை வேலை பார்க்கும் பெண்கள் 100 க்கு இரண்டு பேர்களே. வேறு எந்த ஐரோப்பிய நாட்டைவிட இது மிகக் குறைவாகும்.

ஸ்திரீ ஆசிரியர்களை இப்பதவிக்கு நியமிக்க இப்போது கூறப்பட்ட ஆட்சேபம்தான் என்ன்? டாக்டர் ஸகிண்ட்லெர் சுமார் 50 பெண் ஆசிரியைகளையே இதைப்பற்றிக் கேட்டார். "எங்களுக்கெல்லாம் புத்தி சாதுர்யமோ, அப்பதவியைத் திறம்பட ஏற்று நடத்துவதற்கான சக்தியோ இல்லாமல் போய்விடவில்லை. ஆண் சகாக்கள் நாங்கள் இந்த வேலைக்குவந்து போட்டி போடுவதை விரும்பவில்லை. அத்துடன் இந்த வேலைக்கு வந்துவிட்டால் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையை நடத்துவது கஷ்டமாகத்தான் இருக்கும்.

பிராங்க்பர்ட்டைச் சேர்ந்த ஒரு பேராசிரியை விஞ்ஞானத் துறையில் அதிக நாட்டமிருப்பது காரணமாக குடும்பத்தை சரிவரக் கவனிக்க முடியவில்லை என்று தன் அனுபவத்தைக் கூறியிருக்கிறார். பெண் ஆசிரியைகளில் 100 க்கு 72 பேர்கள் விவாகமாகாதவர்களாக இருப்பதற்கு இதுவே காரணம் என்று இவர் கூறுகிறார்.

## அறிவு

அறிவைப் பெற்றும் அதைப் பயன்படுத்தாதவன், உழுபடை கொண்டு உழுத பின்னும் விதை விதைக்காத உழவனைப் போன்றவன் தான். —சாசிடி.

⁂ ⁂ ⁂

அறிவைப் பெறுவதற்கு எவ்வளவு அரிய பெரிய முயற்சிகள் தேவையோ, அதைப் போல்தான் அறியாமையை மறைப்பதற்கும் அரிய முயற்சி தேவை. —மேரட்னிகே

⁂ ⁂ ⁂

அறிவு பெற்றிட யார் நினைக்கிறார்களோ, அவர்கள் படிக்க வேண்டிய அரிச்சுவடி, தாம் அறிவிலிகள் என்பதுதான்! — சிசில்

⁂ ⁂ ⁂

அறிவு, வெறும் உண்மைகளை தெரிந்து வைத்திருப்பதல்ல, நல்ல காரியங்களுக்குப் பயன்படவேண்டும். —புச்னன்.

⁂ ⁂ ⁂

அறிவு வேறு; படிப்பு வேறு! படித்தவன் குளிர் நீருள்ள உலையிலிட்ட அரிசி; அறிஞன் பொங்கி வடித்தெடுத்த சோறு! — வி-சே-ஷி.

⁂ ⁂ ⁂

அறிவு பெருகப் பெருக அறுதியிட்ட முடிவுகள் கிடைக்குமென எதிர்பார்க்கிறார்கள். ஆனால் சந்தேகங்கள்தான் பெருகிவிடுகின்றன! — கதே.

⁂ ⁂ ⁂

அறிவு நம்மைத் தெளிவடைய வைக்கிறது; தெளிவுக்குப்பின் துணிவுபெற உதவுகிறது. தெளிவும், துணிவும் வந்துவிட்டால், வேறென்ன வேண்டும் மனிதனுக்கு! — ஹம்பிரி.

⁂ ⁂ ⁂

அறிவாளியை பட்டம், பதவி, சொத்து, சுகம் எதுவுமே மயக்கமுடியாது; உயர்ந்த கருத்துக்கும், பெருந்தன்மைக்கும் அவன் என்றென்றுமே அடிமை. — அடிசன்.

⁂ ⁂ ⁂

அறிவு என்பது மிக வேடிக்கையான பொருள். நாம் நிற்குமிடத்திற்கு மிக அருகாமையிலேயே இருக்கும். ஆனால் தொட முயன்றால் அது போய்க்கொண்டே இருக்கும். — வேர்ட்ஸ்வொர்த்.

⁂ ⁂ ⁂

அறிவின்மை என்பது ஒரு சூன்யவெளி. அங்கே உணர்வு அசைவில்லாதிருக்கிறது. அங்கிருந்து எழுந்துவிட்டால் அதைப் பிடிக்கவே முடியாது. — ஜான்சன்.

⁂ ⁂ ⁂

அறிவு எது? அதை எங்கு தேடினால் கிடைக்கும்? எப்படித் தேடினால் கிடைக்கும்? என்பதை அறிந்தவர்தான் அறிவுடையவர். — ஹோர்ஜ்.

⁂ ⁂ ⁂

அபரிமிதமான அறிவுபெற்றதால் மனிதன் புத்திசாலி ஆவதில்லை. —ஹெராலியன்.

⁂ ⁂ ⁂

எப்பொருளை யாரிடம் கேட்டாலும், அப்பொருளின் மெய்ப்பொருளைக் காண்பதே அறிவாகும். — திருவள்ளுவர்.

— வி. எம். வி. ரகுபதி.

## தமிழ் நங்கையரின் உள்ளப் பாங்கு

—பத்தினி—

உடலுக்கு மெருகிட்டுப் போற்றும் கொள்கை பெண்பாலாரிடையே என்றும் உண்டு. உள்ளத்தையும் மெருகிட்டுப் போற்றவேண்டுமென்பதைச் சில வேளைகளில் மறந்துதான் விடுகின்றார்கள். உள்ளத்தை இலட்சிய முறையில் உயர்த்திக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் இல்லறம் நன்றாக நடக்கும். மனைக்கு விளக்க மடவாளாக வாழமுடியும்.

இளம் பராயத்தில், பெற்றாரின் அரவணைப்பில் நங்கை கள்ளங் கபடமற்ற உள்ளத்துடன் வளருகின்றாள். உள்ளத்தில் எதையும் மறைத்துவைக்கும் தன்மை அவளிடம் எள்ளளவும் காணப்படுவதேயில்லை. மணவாளன் ஒருவன் அவள் மனத்தில் புகுந்துவிடுகின்றான். அதன்பின் அவளின் மனம் இல்லற வாழ்விற்கேற்ப மாறுபட்டுவிடுகின்றது. தன் கணவனை உள்ளத்தின் விளக்குப் போல உயர்த்திப் போற்றுகின்றாள். தன் கணவனைப் பற்றி அயலாருக்கு எதுவித குறையும் கூறமாட்டாள். பிறர் குறை கூறின் அவளுக்குப் பேரிடியாக இருக்கும். கணவனுக்குக் குறிப்பாகக் கூறி விளங்கவைப்பதேயன்றி நேரடியாக நிந்திக்கும் வழக்கம் அவளிடம் இல்லை. தலைவனைப்பற்றி எதுவும் வெளியில் கூறாது மறைக்கும் தத்துவம் பிறந்துவிடுகின்றது.

ஒரு தலைவி, தன் தலைவனைப் பற்றிக் குறை கூறும் தோழியை விழித்து, மனம் வருந்துகின்றாள். எந்த நங்கையும் தலைவனைக் குறை கூறுவதை விரும்பமாட்டாள் என்பதற்குக் கீழ் வரும் பாட்டுத் தக்கதோர் சான்று.

"நோம் என் நெஞ்சே நோம்
என் நெஞ்சே
இமை தீய்ப் பன்ன கண்ணீர்
தாங்கி
அமைதற் கமைந்தருங்
காதலர்
அமைவிலர் ஆகுதல் நோம்
என் நெஞ்சே"

என்கிறாள் தலைவி.

தலைவன் பிரிந்தமையால் அவள் கலங்கவில்லை. தலைவனை 'அமைவிலர்' எனக் கூறிய தோழியைக் காணும் பொழுது அவள் கண்கள் கலங்குகின்றன.

தலைவர்கள் சில காலங்களில் தவறுகள் செய்தல் உண்டு. தம் உயிரனைய தலைவியரை மறந்து பிற மகளிர்பாற் செல்லுதலும் உண்டு. மீண்டும்வரும் தலைவரிடம் தலைவியர் சிறு கோபம் காட்டுவர். உண்மை அன்புக்குரியவனாதலால் அவர்களின் கோபம் நிலைப்பதில்லை. இருவரும் மகிழ்ந்திருக்கும் காலத்தில் தலைவனுடைய குறையைச் சுட்டாமற் சுட்டிக் காட்டுவாள் தலைவி. இச்சந்தர்ப்பத்தை கீழ்வரும் பாட்டு அழகாக உணர்த்துகின்றது.

"அணிற்பல் அன்ன கொங்கு
முதிர் முண்டகத்து
மணிக்கேழ் அன்னமா நீர்ச்
சேர்ப்ப
இம்மைமாறி மறுமையாலனும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர்
பவளே"

இம்மை, மறுமை யெல்லாவற்றிலும் தன் தலைவனே கணவனாக வேண்டுமென்று விரும்புகிறாள்; கேட்கின்றாள். அத்தோடு தன் தலைவனின் '(நெஞ்சு நேர்பவள்)' உள்ளத்திற்கு ஒத்த தலைவிதானேயாக வேண்டுமென்றும் கேட்கின்றாள். இக் கூற்றினால் தன்னை என்றும் பிரியேல் என்று உணர்த்துகின்றாள் தலைவி. இன்னும், சிலகாலம் தலைவன் தன்னை உள்ளத்திற்கு ஒத்தவளாகக் கருதாமல் விட்டுச் சென்றான் என்பதையுணர்த்தி, அவனை நாணச் செய்தாள்.

இலட்சிய மனமும் கற்புத் திறனும் படைத்த நங்கையர்கள் முன்பு இருந்தார்கள். இலக்கியங்களிலும் அவர்கள் அழியாச்சிற்பங்களாகப் பொறிக்கப்பட்டார்கள். இன்றும் அத்தகைய நங்கையர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். இலக்கியங்களைக் கற்றால் போதுமா, அவற்றிலுள்ள உயர் கருத்துக்களை நம் தமிழ் நங்கையர்கள் உணர்வினில் ஊறச் செய்தல் வேண்டும்; உயர்ந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும்,

## 'பொருளாதாரம் பெருக கைத்தொழில் வளரவேண்டும்'

வேலணை, புதன்

"இலங்கை போன்ற சின்னஞ்சிறு நாடுகள் பொருளாதார பலம்பெற வேண்டுமானால் கைத்தொழில் வளம்பெற வேண்டும். இன்று எமது நாட்டில் எத்தனையோ ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் படித்துவிட்டு அரசாங்க உத்தியோகத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் இனிமேல் தமது முயற்சியை கைத்தொழில் துறையில் ஈடுபடுத்தவேண்டும் கிராமந்தோறும் நெசவாலைகள் நிறுவி வேலையற்றிருக்கும் பெண்களுக்கு கைத்தொழில் அறிவு புகட்டுவதன் மூலம் எமது தேவைகளின் ஒரு பகுதியையாவது நாம் நிறைவு செய்து கொள்ளமுடியும்" என்று ஆசிரியர் திரு. ஐ. பொன்னையா வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தால் நிறுவப்பட்ட நெசவு நிலையத்தை திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பண்டிதர் அ. பொன்னுத்துரை பேசியதாவது:-

"குடிசைக் கைத்தொழில் ஏழைக் குடியானவர்களை மட்டுமல்லாமல் பாரத சமுதாயத்தையே வாழ்விக்கும் என்ற உண்மையை மகாத்மாகாந்தி அடிகள் உணர்ந்திருந்தார்.

காந்தி அடிகளும் திருவள்ளுவரும் போற்றிபுகழ்ந்த நெசவுத் தொழிலை கிராமந்தோறும் விஸ்தரிப்பதன் மூலம் நாம் சமுதாயத்துக்கு பெருந்தொண்டு செய்தவர்களாவோம்".

வேறு பலரும் பேசினர்.

## நாடக மூலம் சீர்திருத்தம்
### சாவகச்சேரி எம். பி. கருத்து

யாழ்ப்பாணம், வியாழன்

"ஒரு குடும்பத்திலுள்ளவர்களுக்கு சில கருத்து வேற்றுமைகள் தோன்றுவதுபோல சமூகத்திலும் சில பாகுபாடுகள் தோன்றுவது இயல்பே. இப்படியான சமூக சீர்கேடுகளைக் களைவதற்குச் சமூக சீர்திருத்த நாடகங்களுக்கு வலிமையுண்டு இளைஞர்கள் சீர்திருத்த நாடகங்கள் மூலம் தொண்டுசெய்ய வேண்டும்" என்று சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கைதடி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரின் 'நம்பிக்கைத்துரோகி' நாடகத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

தென்மராட்சி மக்கள் முன்னேற்றச் செயலாளர் திரு. கே. நடராசா பேசுகையில் தமிழ்மக்களைப் பிளவுபடுத்திவரும் சாதிப்பாகுபாடுகளை ஒழிப்பதற்குப்பலர் முன்வந்துள்ளது வரவேற்கத்தக்கதே என்று குறிப்பிட்டார்.

திரு. சோ. செல்லத்துரை தலைமை வகித்தார்.

## ராஜினாமாச்செய்ய விரும்பவில்லை

கொழும்பு, செவ்வாய்

தான் எந்தநேரத்திலாவது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை எனப் நிதி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியும், நியமன அங்கத்தவருமான திரு. ஆர். எஸ். வி. போலியர் தெரிவித்துள்ளார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்றக் காரியதரிசிப் பதவியிலிருந்து தன்னை நீக்கும்படி தான் பிரதமரைக் கேட்டுக்கொண்டதே யொழிய அங்கத்தவர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யும் எண்ணம் தனக்கில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 23-5-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக்கோஷ்டி.

இரவு 7-00 ரேடியோ டாக்டர் — பேச்சு, 7-15 நேயர் விருப்பம், 7-45 'மனோரஞ்சிதம் - 16' — தொடர்நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம், 9-30 குரல் வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 இசைக்கதம்பம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திருவாளப்புத்தூர் டி. கே. பக்கிரிசாமிப் பிள்ளை — புல்லாங்குழல், 1-30 குரலிசை, 1-50 வாத்திய இசை, 2-10 திருவாளப்புத்தூர் டி. கே பக்கிரிசாமிப் பிள்ளை — புல்லாங்குழல்.

மாலை 5-15 மெல்லிசை, 5-45 வாத்தியஇசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 ஆர். ராஜம் — பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி எம். எஸ். பாலசுப்ரமண்யசர்மா — பாட்டு, 8-40 திரைப்படஇசை, 9-15 வீர பாரதம் — இசைச்சித்திரம், 9-30 அகிலபாரத சித்திர நிகழ்ச்சி.

# 9 வட்டாரங்களில் 25 பேர் போட்டி

## பருத்தித்துறை பட்டினசபை அபேட்சா பத்திரங்கள் தாக்கல்

மாவிட்டபுரம், செவ்வாய்

பருத்தித்துறை பட்டின சபை ஜூலை மாதத்திலிருந்து நகர சபை அந்தஸ்துக்கு உயர்த்தப் பட்டுள்ளது. நகரசபையின் முதலாவது தேர்தலுக்கான நியமனப் பததிரங்கள் இன்று காலை வடபகுதி தேர்தல் அதிகாரி திரு. கே. கணபதி முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டன. 9 வட்டாரங்களிலும் பலத்த போட்டிகள் ஏற்பட்டுள்ளன. தேர்தலில் போட்டியிடுபவர்களின் பெயர் விபரம் வருமாறு.

1-ம் வட்டாரம்: திரு. வேலுப்பிள்ளைநாகநாதன், திரு. இராசரத்தினம் சபாரத்தினம்

2-ம் வட்டாரம்: வழக்கறிஞர் சி. மயில்வாகனம் வேலும்மயிலும் (தற்போதைய அங்கத்தவர்) திரு. வைரமுத்து சந்திரசேகரம்.

3-ம் வட்டாரம் வழக்கறிஞர் திரு. நமசிவாயம் நடராசா, (தற்போதைய தலைவர்) திரு, முருகையா சூரியகாந்தி திரு. சின்னத்தம்பி பரமானந்தம்.

4-ம் வட்டாரம் திரு. பசுபதி ஆறுமுகம், டாக்டர் தம்பிப்பிள்ளை, திரு. தம்பிராசா சிவபாதம், திரு- சூசைப்பிள்ளை தங்கராசா.

5-ம் வட்டாரம் திரு. மத்தீஸ்பிள்ளை மரியாம்பிள்ளை (தற்போதைய அங்கத்தவர்) திரு. சின்னப்பு நாகலிங்கம், திரு. ராயராமலிங்கம் விசுவலிங்கம்.

6-ம் வட்டாரம் திரு. முருகேசு கந்தசாமி (தற்போதைய அங்கத்தவர்) திரு. இரத்தினம் தங்கராசா

7-ம் வட்டாரம் திரு. ஆழ்வாப்பிள்ளை சபாரத்தினம் (தற்போதைய உப-தலைவர்) திரு. கந்தையா தியாகராஜா.

8-ம் வட்டாரம்: வழக்கறிஞர் வல்லிபுரம் தர்மலிங்கம், திரு. சிவனடியார் சிவப்பிரகாசம், திரு. சங்கரலிங்கம் சின்னத்துரை, திரு. ராஜதுரை சந்திரசேகரம்.

.9-ம் வட்டாரம்: திரு. செல்லையா செல்ராசா, திரு. கந்தையா சேனாதிராசா, திரு. ராசரத்தினம் சதாசிவம்பிள்ளை

தற்போதுள்ள 8 அங்கத்தவர்களில் 6 பேர் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர். 9-வட்டாரங்களிலும் மொத்தம் 25 பேர் போட்டியிடுகின்றனர் தேர்தல் அடுத்த மாதம் 22-ம் திகதி நடை பெறலாமெனத் தெரிகிறது.

## ஆழ்கடலில் 22 பேர் திமிங்கிலங்களுக்கு பலி

மனிலா, மே 21

குழந்தைகள் உட்பட 22 பேர்கள் இரத்த வெறியுள்ள திமிங்கலங்களுக்கு கிழக்கு லூசான் கடலில் இரையாளுர்கள் என்று நம்பப்படுகிறது. 42 பேர்களைக் கொண்டுசென்ற படகு நடுக்கடலிலே மூழ்கியபோது இச்சம்பவம் ஏற்பட்டது. மேலும் 5 பேர் அச்சத்தினுல் இறந்து போனுர்கள்.

15 பேர்கள் திமிங்சிலங்களிடமிருந்து தப்பி குளிர்காற்றிலும் பயங்கர கடலிலும் கஷ்டப்பட்டு, வள்ளத்தில் தொங்கியபடி கரையை அடைந்தார்கள்.

கரை சேர்ந்த ஒருவர் தெரிவித்ததாவது:- "எங்கள் கோஷ்டி ஜோம்லிக் என்னும் தீவ்ற்கு சென்றுகொண்டிருக்கும்போது ஆழமான கடலில் கப்பல் மூழ்கியது. தென்கிழக்கு மனிலாவுக்கு 100 மைல்களுக்கு அப்பால் இந்தத்தீவு உள்ளது.

அப்பொழுது தூரத்தில் சுமார் 20 திமிங்கிலங்கள் வட்டமிட்டுக்கொண்டும், தங்களுக்குள் மோதுப்பட்டுக்கொண்டும் தண்ணீருக்குமேல் காணப்பட்டன.

திருமதி மரிகுவிட்டா, தனது மூன்று பெண் குழந்தைகள், இறந்துவிட்டதாகவும் இரு குழந்தைகள் திமிங்கிலங்களுக்கு இரையாகினுர்களென்றும் கடைசிக் குழந்தை காப்பாற்றப்பட்டபின் மரணமானதென்றும் தெரிவித்தார்.

## துறைமுகத்தில் களவு

கொழும்பு, செவ்வாய்

கொழும்புத் துறைமுகத்தில் உள்ள சுங்கப்பகுதி பொருள் வைப்பு நிலையத்திலிருந்து 15,000 ரூபா பெறுமதியான துணிவகைகளும், சிகரெட்லைட்டர்ஸும் களவாடப்பட்டன. சென்ற சனிக்கிழமைக்கும் நேற்றைக்கும் இடையிலே களவாடப்பட்டதாக நம்பப்படுகிறது. இது சம்பந்தமாக எவரும் கண்டு பிடிக்கப்படவில்லை.

## சமாதான உத்தியோகஸ்தர்களாக கிராம சேவையாளர்

காலி, செவ்வாய்

கிராம சேவையாளர்களை, கிராமத் தலைமைக்காரர்களாகவும், பின்னர் சமாதான உத்தியோகஸ்தர்களாகவும் நியமிக்க வேண்டும் என அட்டோர்ணி ஜெனரலும் பொதுச் சேவைக் கமிஷனும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறியுள்ளனர்.

தற்போது, கிராம சேவையாளர்களின் கடமை பற்றி அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பப்பட்ட சட்ட திட்டங்களில் கிராம சேவகர்களை சமாதான உத்தியோகஸ்தர்களாகவும் நியமிக்க வேண்டும் என குறிப்பிடப்பட வில்லை. கிராமசேவையாளர்கள் கிராமத் தலைமைக்காரர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

## உடுவில் ஸ்ரார்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

சென்றவாரம், கந்தரோடை சனசமூக நிலையம் நடத்திவரும் சுற்றுப்போட்டியில் ஸ்ரீ முருகன் கோஷ்டிக்கும், உடுவில் ஸ்ரார்ஸ் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற கைப்பந்தாட்டப்போட்டியில் உடுவில் ஸ்ரார்ஸ் கோஷ்டி 2-1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது.

# ரயில்-பஸ் மோதலில் ஒருவர்பலி; மூவர்காயம்

கொழும்பு, செவ்வாய்

நாவின்ன புகையிரத நிலையத்திற்கு பத்து யார்களுக்கு அப்பால் நேற்றுப் பிற்பகல் கடுகதிப் புகையிரதத்துடன் இ. போ. ச. பஸ் ஒன்று மோதியது. இவ்விபத்தில் ஒருவர் மரணமானுர். மூவர்காயமடைந்தனர்.

கோட்டையிலிருந்து மஹரகம சென்றுகொண்டிருந்த கடுகதிப் புகையிரதத்துடன் நாவின்ன புகையிரத நிலையத்திற்கு பத்து யார்களுக்கப்பால் பாதுகாப்பில்லாத புகையிரதக் கடவையடியில் பஸ் ஒன்று மோதியது- ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்ட இ. போ. ச. தலைவர் பஸ சாரதியை தற்காலிகமாக வேலை நிறுத்தம் செய்து வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார். புகையிரதக் கடவையடியில் பஸ்ஸை நிற்பாட்டுவதற்கு முயன்ற போதிலும் 'பிறேக்' சரியாக வேலைசெய்யவில்லை யென்று பஸ சாரதி தெரிவித்தார். 'பிறேக்' சரியாக வேலைசெய்யாததினுல் பஸ புகையிரதத்தின் மூடப்படாத மூன்று கதவுகளில் மோதுண்டு பலத்த சேதத்துக்குள்ளாகியது.

ரயிலில் பிரயாணம் செய்த கொழும்பு ஆஸபத்திரி ஊழியர் திரு. எஸ. ஏ. றிச்சார்டே மரணமானவர். பஸ சாரதி சைமன் (49), மொஹைதீன் (14) திருமதி அலிஸ அமரசிங்கா ஆகியோர் காயமடைந்தனர்.

கடந்த 26 நாட்களில் பாதுகாப்பில்லாத கடவைகளில் நேற்று நடந்த விபத்துடன், மூன்று விபத்துக்கள் நடந்துள்ளன. இவற்றில் 9 பேர்கள் மரணமானுர்கள். நேற்று நடந்த விபத்துக்கு முன்னர் வெசாக் தினத்தில் நடைபெற்ற விபத்தில் ஒரு பெண் மரணமானுர். அதற்கு முதல் ஏப்ரல் 24-ல் நடைபெற்ற விபத்தில் 7 பேர் மரணமானுர்கள்.




வானவெளி சகாப்த சக்தி ...

லங்கா வில் கலந்துள்ள ப நோ சே

சிறந்த பெற்ரேலை மேலும் மேம்படச் செய்கிறது.

இது புதியது! இதோ இருக்கிறது! அதுதான் அற்புத சேர்மானஸ் ப நோ சே லங்கா சூப்பர் லங்கா பெற்ரேல் ஆகியவற்றில் பிரத்தியேகமாக, எந்தவித மேலதிக செலவின்றி கிடைக்கிறது!

சேர்மானப் பொருட் பற்றிய தொழிற்கலை அறிவின் பயனுக தயாரிக்கப்படும் புத்தம் புதிய ப நோ சே கீழ்க் காணும் கோளாறுகள் ஏற்படாவண்ணம் தடுப்பதற்கென உங்கள் பெற்ரேலில் கலக்கப்பட்ட ஒரு ஜடத்துவ எரிபொருட் சேர்க்கையாகும்.

- ஸ்பார்க் பிளக் வேலை செய்யாமல் போவது
- சமதளத்தில் இக்னீஷியம் அடித்தல்
- என்ஜின் அதிர்ச்சிகள்
- பிசின் மண்டி உறைகள்
- என்ஜினில் சப்தங்கள்
- கார்போரேட்டரில் மண்டி உறைகள்

இலங்கை பெற்ரேலியம் கூட்டுத்தாபனம் சேர்மானப் பொருட்கள் பற்றிய உன்னத ஆராய்ச்சியின் பயனுக, உங்கள் வாகனங்களின் மேன்மையான இயந்திரங்களுக்கு பாதுகாப்பையும் நீடித்த ஆயுளையும், அளிப்பதுடன் உங்கள் பெற்ரேலிலிருந்து பெறக்கூடிய ஆகச்சிறந்த பயனையும் எப்பொழுதும் உங்களுக்கு அளிக்கும்

பெற்ரேல் செலவை சேமியுங்கள்
உதிரிப்பாகங்களில் சேமியுங்கள்
பராமரிப்பு செலவை சேமியுங்கள்

இலங்கை பெற்ரேலியம் கூட்டுத்தாபனம்,
113, காலி ரோட், கொழும்பு.

CAS/CPC/265.

# "மந்திரி சபையில் புதிதாக எவரும் சேர்க்கப்படமாட்டார்கள்"

— பிரதமர்

## மந்திரி சபைக் கூட்டத்தில் இரு மந்திரிகள் வாக்குவாதம்

கொழும்பு, செவ்வாய்

மந்திரி சபையில் புதிதாக எவரையும் சேர்த்துக் கொள்ளும் நோக்கம் தமக்கு இல்லையென்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று தெரிவித்துள்ளார். திரு. ஏ. பி. பெரேராவுக்கு எந்த மந்திரிப்பதவியும் வழங்கப்படமாட்டாதென்று பிரதமர் அறிவித்துள்ளாரெனவும் திரு. பெரேரா இன்றோ அல்லது நாளையோ பீக்கிங் செல்வார் என்றும் நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது

இன்று காலையும் மாலையும் மந்திரிசபைக்கூட்டம் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெற்றது. இன்று நடைபெற்ற மந்திரி சபைக்கூட்டத்தில், சிம்மாசனப்பிரசங்கம், தமிழ்மொழி உபயோகம் பற்றி ஆராயப்பட்டதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

திரு. ஏ. பி. பெரேரா மந்திரிசபையில் இடம் பெறுவாரா என்று ஒரு மந்திரி பிரதமரைக் கேட்டபொழுது, மற்றுமொரு மந்திரி இந்த விஷயத்தில் குறுக்கிட்டார். இதனைத்தொடர்ந்து இவ்விரண்டு மந்திரிகளுக்குமிடையேயும் வாக்குவாதம் ஏற்பட்டது. இன்றைய மந்திரிசபைக் கூட்டத்தில் இடம் பெற்ற முக்கிய முடிவுகள் குறித்து நாளை புதன் கிழமை நடைபெறும் அரசாங்க பார்லிமெண்டரிக் குழுக்கூட்டத்தில் பிரதமர் விளக்குவார் எனக்கூறப்படுகிறது.

செனட்சபைக் கட்டடத்தில் காலையும், அலரிமாளிகையில் மாலையும் நடைபெற்ற இக்கூட்டத்தில் அரசாங்கத்தின் எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

## தமிழ் மணிஓடர் மொழிபெயர்ப்புக்கு அனுப்பப்பட்டது!

யாழ்ப்பாணம், புதன்

திருக்கோணமலையிலிருந்து ஒருவர் கோப்பாயிலுள்ள தனது நண்பருக்கு தமிழில் மணி ஓடரை அனுப்பி வைத்தார். இந்த மணி ஓடரைக் கொண்டு திரு. சுப்பிரமணியம் என்பவர் கோப்பாய் தபாற்கந்தோருக்குச் சென்றார். அங்கு கவுண்டரிலிருந்த சிங்கள ஊழியர் மணிஓடரில் எழுதியிருந்ததை மொழிபெயர்ப்புக்காக கொழும்புக்கு அனுப்பியிருப்பதாக அவரிடம் கூறினர்.

திரு. சுப்பிரமணியம் இது சம்பந்தமாக தபால் நிலைய அதிகாரிக்குப்புகார் செய்துள்ளதாகத் தெரிகிறது.

## வாஷிங்டனில் வான் வெளிவீரர்

வாஷிங்டன், மே 21

அமெரிக்க வான் வெளி வீர கேர்ப்டன் கூப்பருக்கு இன்று வாஷிங்டனில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. ராஜாங்க காரியாலயத்தில் அவருக்குப் பகல் போசன விருந்து அளிக்கப்பட்டது. அமெரிக்க பார்லிமென்டின் இரு சபைளிலும் கூப்பர் உரைநிகழ்த்துவார்.

## எரிமலைக்கு 103 பேர் பலி!

பாலி தீவில் கடந்த வியாக்கிழமையும், சனிக்கிழமையும் எரிமலை வெடித்ததால் 103 பேர் உயிரிழந்ததாய் அறிவிக்கப்பட்டது.

## சமரசிங்கா உதவி தொழில் மந்திரியாவார்?

கொழும்பு, செவ்.

குளியாப்பிட்டி எம். பி. திரு. சமரசிங்கா, உதவி தொழில் மந்திரியாக நியமிக்கப்படுவார் எனத் தெரியவருகிறது.

## 455 சீனர் தாயகம் திரும்புகிறார்கள்

புதுடில்லி, மே 21

ராஜஸ்தானில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சீனர்களில் 455 பேர், சீனாவுக்குத் திருப்பியனுப்பும் பொருட்டு இன்று சென்னைக்கு அழைத்து வரப்பட்டனர். முன்பு தாயகம் செல்லவிரும்பிய 53 சீனர் மீண்டும் மனம் மாறி, இந்தியாவிலேயே தங்க, தங்களை அனுமதிக்கும்படி எழுத்து மூலம் விண்ணப்பித்துக்கொண்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. வருகிற 25-ந் திகதி 455 சீனர்களும், சீனாவுக்கு கப்பலில் அனுபபிவைக்கப்படுவர். 870 பேரைக் கொண்ட சீனர்களின் முதலாவது கோஷ்டி சென்ற மாதம் சென்னையிலிருந்து அனுப்பப்பட்டது. இதுவரை 600 சீனர்கள் தாயகம் திரும்பமறுத்திருக்கிறார்கள்.

## ராதா கிருஷ்ணன் டில்லி திரும்பினார்

புதுடில்லி, மே 21

இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் ஆப்கானிஸ தானிலும், ஈரானிலும் சுற்றுப் பிரயாணம் செய்தபின், இன்று புதுடில்லி திரும்பினார். டாக்டர் ராதா கிருஷ்ணனை ஈரான் மன்னர் ஷா மந்திரி சபையினர். ராஜதந்திரிகள் ஆகியோர் தாயகத்திற்கு வழியனுப்பி வைத்தனர். டில்லி வந்து சேர்ந்த ஜனாதிபதியை பிரதமர் நேரு, மந்திரிகள் ராஜதந்திரிகள் ஆகியோர் வரவேற்றனர். 31 பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. முப்படை காவல் மரியாதையும் நடைபெற்றது.

## சுவீப் பரிசு கோரப்படவில்லை

### யாழ்ப்பாணத்தில் விற்கப்பட்டது

கொழும்பு, செவ்வாய்

201-வது ஆஸ்பத்திரி சுவீப்பில் முதலாம், இரண்டாம் பரிசுக்குரியவர்கள் நேற்றைய தினம் தமது பணத்திற்காக 'செக்'கைப் பெறுவதற்கு வரவில்லை. 51,640 ரூபா, 20,656 ரூபா பெறுமதியான இப் பரிசுகளுக்கான டிக்கட்டுகள் பட்டகமவிலும், யாழ்ப்பாணத்திலும் உள்ள சுவீப் ஏஜண்ட்மாரால் விற்கப்பட்டதாகும்.

## நேட்டோ வெளி மந்திரிகள் மகாநாடு

ஒட்டாவா, மே 21

நேட்டோ வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு நாளை ஒட்டாவாவில் ஆரம்பமாகும்.

## மேலும் 11 காலிஸ்தானங்கள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்னும் 11 கிராம சேவையாளரின் ஸ்தானங்கள் நிறுவப்படாமலிருக்கின்றன. விரைவில் இந்த ஸ்தானங்கள் நிரப்பப்படுமெனத் தெரிகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 155 இடங்களுக்கு 144 கிராம சேவையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 42 பேர் பழைய கிராம அதிகாரிகளாவர்.

# "ஏமாற்றியவர்களுக்கு வீழ்ச்சி வந்துவிட்டது"

## உயிலங்குளம் கூட்டத்தில் திரு. எஸ். ஜே. வி. விளக்கம்

எருக்கலம்பிட்டி, செவ்வாய்

"இன்று ஏமாற்றப்பட்ட இனமாக நாம் கருதப்படுகிறோம். 'அரசன் அன்று அறுப்பான் தெய்வம் நின்று அறுக்கும்' என்பதற்கிணங்க இன்று அரசாங்கத்துக்குவீழ்ச்சி வந்துவிட்டது. இந்த வீழ்ச்சியை விரைவில் எதிர்பார்க்கலாம். எமது உரிமைகளைக் கொடுக்கும் வரை நாம் ஒரு கட்சியினருக்கும் ஆதரவளிக்கமாட்டோம்' என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் உயிலங் குளத்தில் நடைபெற்ற தமிழியக்கக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

மன்னார் எம். பி. திரு.வி.ஏ. அழகக்கோன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

1960-ம் ஆண்டு மார்ச் மாதத் தேர்தலில் நாம் அமோக வெற்றிபெற்றோம். இதன் காரணமாக ஐக்கிய தேசியக்கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையே பெரும் போட்டி ஏற்பட்டது. இரு கட்சிகளும் எமது ஆதரவை நாடின. திரு. டட்லி எமது ஆதரவை நாடியபோது நாம் எமது கோரிக்கைக்கு இணங்கும்படி கேட்டோம். எமது கோரிக்கை சிறுபான்மையினத்தைச் சேர்ந்த நாம் மீட்கப்பட்ட அரசியல் சுதந்திரத்தைப் பெறுதலேயாகும். திரு. சேனநாயககாவுக்கு நாம் இழந்த மொழியுரிமையைப் பெறுதல், பிராந்தியசபைகளை ஏற்படுத்தி தமிழ்ப்பகுதிகளில் தமிழ்மொழியை ஆட்சி மொழியாக நிர்வாகத்தில் கொண்டுவருதல், மலைநாட்டு தமிழ்ச் சகோதரர்களுக்கு இழந்த குடியுரிமை வாக்குரிமை வழங்கல் மலைநாட்டுத் தமிழர்களின் பிரச்சினைகள் தீரும்வரை அப்பகுதியில் நான்கு நியமன எம்.பிக்களை நியமித்தல் ஆகிய நான்கு கோரிக்கைகளையும் சமர்ப்பித்தோம். ஐக்கியதேசியக்கட்சியிடம் நாம் சமர்ப்பித்திருந்த கோரிக்கைகள் ஒன்றினையாவது பூர்த்திசெய்ய முன்வரவில்லை. சுதந்திரக்கட்சியினரும் எமது ஆதரவைநாடிபோது இக் கோரிக்கைகளையே சமர்ப்பித்தோம். அவர்கள் முதலாம் இரண்டாம் கோரிக்கைகளை ஏற்பதாகத் கூறினர். மூன்றுவது கோரிக்கைப் பரிசீலனை செய்து சொல்வதாகவும் நான்காவது கோரிக்கையில் ஒரு பகுதியை ஏற்பதாகவும் தெரிவித்தனர். இரண்டு மலைநாட்டுப் பிரதிநிதிகளை நியமிக்க ஒப்புக்கொண்டனர். இதனல் நாம் சுதந்திரக்கட்சியுடன் ஒத்துழைத்து ஐக்கிய தேசியக்கட்சியைத் தோற்கடித்தோம்.

அடுத்த பொதுத்தேர்தலில் சுதந்திரக்கட்சி பெரும்வெற்றியைப் பெற்றது. எமது கோரிக்கையை நிராகரித்தார்கள். ஐந்துமாதங்கள் இது விஷயமாகப் பேசியும் பலன் ஏற்படவில்லை. இதனல் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்தோம். இரு மாதங்களாக அரசாங்கத்தைப பெரும் கஷ்டத்திற்குள்ளாக்கினோம்.

திருவாளர்கள் சி கதிரவேற்பிள்ளை, அ. அமிர்தலிங்கம், ஆர். எம்.இராமயைா, எம். ஈ. ஏச். முகமது அலி, மௌசூர் மௌலானு, கே. எஸ். ஏ. கபூர் ஆகியோரும் பேசினர்.

கொழும்பு, செவ்வாய்

வொலிக்கடையைச் சேர்ந்த மூன்று வயதுப் பிள்ளைக்கு கொதிதண்ணீர் ஊற்றுண்டதால் அப் பிள்ளை மரணமானது.

# சர்வாதிகாரம் பற்றி 'நித்தாஸா' விளக்கம்

## 'நியமன எம். பி. க்களுக்கு மந்திரி பதவி கூடாது'

கொழும்பு செவ்.

"மக்களால் தெரிவு செய்யப்பட்ட பார்லிமெண்ட் அங்கத்தவர்களை உதாசீனம் செய்து, நியமன அங்கத்தவர்களுக்கு மந்திரி பதவிகள் வழங்குவதும் சர்வாதிகார ஆட்சியாகும்"

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த பார்லிமெண்ட் அங்கத்தவரான திரு. சோமவீர சந்திரசிறியினல் நடாத்தப்படும் "நித்தாஸா" என்ற வாராந்த செய்தி இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஒரு கட்டுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

"நித்தாஸா" வார இதழின் முதற் பக்கத்தில் வெளியான அந்தக் கட்டுரையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

"மக்களால் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் ஜனப்பிரதிநிதிகள் சபையில் இருக்கையில், நியமன அங்கத்தவர்களுக்கு மந்திரி பதவிகள் வழங்குவது ஒரு சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவதுபோல் தான். இவ்வித நடவடிக்கை பார்லிமெண்ட அங்கத்தவர்களை உதாசீனம் செய்வது போலாகும்.

பொது மக்களின் அபிப்பிராயங்களை அறியாது, தனிப்பட்ட ஒருவர் ஒரு நாட்டை ஆழ்வதுதான் சர்வாதிகார ஆட்சியாகும். தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கம் மக்களின் விருப்பத்தை அறியாது எந்த விதமான முக்கியமான நடவடிக்கையும் மேற்கொண்டாலும், அதுவும் ஒரு சர்வாதிகார ஆட்சியையே குறிக்கும்"

## வெள்ளத்துக்கு 400 பேர் பலி

காபூல், மே 21

ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக 400 க்கதிகமானோர் உயிரிழந்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. சாலைகள் தகவல்சாதனங்கள் ஆகியவற்றுக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டுள்ளனவாம்.

## கடைசி இந்திய கைதிகள் விடுலை?

புதுடில்லி, மே 21

382 இந்தியப் போர்க் கைதிகளை விரைவில் விடுதலை செய்யவிருப்பதாயும் இது தான் இந்தியர்களின் கடைசிக் கோஷ்டி என்றும் சீனு அறிவித்திருக்கிறது.

கொழும்பு, செவ்வாய்

இலங்கையிலுள்ள செக்கோஸ்லேவேகிய தூதராலயம், வித்தியோதயா பல்கலைக் கழகத்துக்கு 100 விஞ்ஞானப் புத்தகங்களை வழங்கவிருக்கிறது.


வெற்றிகரமான 4-வது வாரம்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய திரைக்காவியம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) மொடர்ன் (பண்டாரவளை) லக்ஷ்மி விஜிதா (இரத்தினபுரி) (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

★ மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு போராட்டம்

★ பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்ட பயங்கர சோதனை!



சிவாஜி கணேசன்
S. S. ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி
ஆர். விஜயகுமாரி
எம். ஆர். ராதா
வி. நாகையா
எம். வி. ராஜம்மா
பி. எஸ். வீரப்பா
புஷ்பலதா

நடித்த

பி. எஸ். வி. பிக்சர்ஸ்

ஆலய மணி

டைரக்ஷன் கே. சங்கர்

இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

மனோகரா (யாழ்ப்பாணம்)

கே. பாலாஜி அஞ்சலிதேவி நடித்த

நாகநந்தினி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மே மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.